உ

ஶ்ரீ गुरुभ्यो नमः ॥

சண்டாளஜாதி தத்வ நிருபணம்.

இஃது
திருநெல்வேலி வீரராகவபுரத்திலிருக்கும்
ஹை கோர்ட்டு வக்கீல்
ஆர். கிருஷ்ணஸாமி ஐயர், எம்.ஏ., பி.எல்.,
அவர்களாலும்
கும்பகோணத்தில் விளங்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதி
ஜகத்குரு **ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளவர்களின்**
அன்பார்ந்த அநுக்கிரகம் பெற்றவரும் மஹாமஹோபாத்தியாய
பிருதாலங்கிருத பிர்மஸ்ரீ
ப. கணபதி சாஸ்திரியளவர்களுடைய
சிஷ்யரும், மஹோபதேசக, கவிரத்ந, பிருதாங்கிதரும்
ஆர்யதர்மம் பத்திராதிபருமான, ஸ்ரீமடம் ஆஸ்தான் வித்வ
ப. பஞ்சாபகேச சாஸ்திரியளாலும்
இயற்றப்பட்டு

லோகோபகாரார்த்தமாய்

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1925. [தபால் சார்ஜ் வேறு.

சண்டாளஜாதி தத்வ நிருபணவிஷயமாய் வித்வான்களின் அபிப்பிராயங்கள்.

ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் கவிரத்நம் மஹோபதேசக பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேசசாஸ்திரியார் அவர்களால் செய்யப்பட்ட சண்டாளஜாதி தத்வ நிருபணம் என்னும் கிரந்தத்தைப்பார்த்தேன். ஸநாதன தர்மத்திற்கு மூலாதாரமான ஜாதிவிபாகங்களும், அவைகளுக்கேற்பட்ட அதிகாரம், தர்மம், இவைகளின் வியவஸ்தைகளும், அநாதி ஸித்தமாயிருக்கும் ஆசாரமுறைகளும் லோகக்ஷேமத்திற்கு மிகவும் அவச்யமாயிருக்க கலிதோஷத்தினால் இது விஷயத்தில் விபரீத புத்தியுள்ளவர்களுடைய துர்வாதங்களைப் பிரமாண நிருபணங்களுடன் கண்டிக்கும் இந்தக் கிரந்தமானது எல்லாரும் அவசியம் பார்க்கவேண்டியதாயும் லோகோபகாரமாயும் இருக்குமென்று நான் நம்புகிறேன்.

மஹாமஹோபாத்தியாய பிர்மஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதரவர்களுடைய பௌத்திரரும் சிஷ்யருமான

மஹோபதேசக சாஸ்திரரத்நாகரம்
பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள்.
அத்வைதஸபா, பிரதானபண்டிதர்
டபீர்புதுத்தெரு, கும்பகோணம்.

श्रीशङ्करगुरुभ्यो नमः ॥

चिज्ज्योतिरेव जगदात्मतया चकास्ति तत्रास्ति कापि
न भिदा परमार्थदृष्टेः । एषामथापि कुधियां क गता
भिदेयमत्यन्तमात्महननेऽव्यवसायिनो ये ॥

ஞானஸ்வரூபமாய்விளங்கும் ஜ்யோதிஸ்தான் ஜகத்ஸ்வரூபமாய்ப் பிரகாசிக்கின்றது. உண்மையான ஆத்மஞானத்தையடைந்து ஸகல பேதங்களையும் அறவேயொழித்து ஒரே பரமாத்ம ஸ்வரூபமாய்ப்பார்க்கும் மஹான்களுக்கு ஒருவிதமான பேதமும் இல்லை. எவர்கள் ஆத்மஸ்வரூபத்தை ஹிம்ஸிப்பதில் மிகவும் முயற்சியுடையவர்களோ அவ்வித அஞ்ஞானிகளுக்கு இந்தஜாதி பேதமானது எப்படி விலகும்?

प्रापञ्चिकव्यवहृतावियमन्तरङ्गमित्यादरेण महता स्मरतां मुनीनाम् ।
यस्त्वन्तरङ्गकुहरेशय आशयोऽयमद्धात्र सम्यगुपपादित इत्यवैमि ॥

பிரபஞ்ச வியவகாரத்திலிருப்பவர்களுக்கு வர்ணாச்ரமவிபாகமானது மிகவும் அந்தரங்கம் என்று அதிக ஆதரவுடன் ஸ்மிருதிகளில் வெளியிட்டவர்களான மஹரிஷிகளுடைய அந்தரங்கமான அபிப்பிராயங்கள் இந்த கிரந்தத்தில் நன்ருய் உபபாதனம் செய்யப்பட்டிருக்கின்றன என்பது என் அபிப்பிராயம்.

चण्डाळजातितत्त्वप्रतिपादननैपुणीं विदुषः ।
पञ्चापगेशनाम्नः प्रकटयतीदं प्रबन्धसद्रत्नम् ॥

பஞ்சாபகேசசாஸ்திரி என்று பெயர்வாய்ந்த வித்வானுக்கு சண்டாளஜாதியின் சாஸ்திரீயமான தர்மங்களைப் போதிப்பதில் இருக்கும் ஸாமர்த்கியத்தை சிரேஷ்டமான ரத்னம்போன்ற இந்த் கிரந்தமானது வெளியிடுகின்றது.

कृष्णतटाकाभिजनः कृष्णो वेदान्तभूषणो विबुधः ।
स्वाशयबोधायादात् पत्रं पत्राधिपाय धर्माणाम् ॥

கருங்குளகிராம வாஸிகளும் வேதாந்தபூஷணம் என்கிற பிருதம் பெற்றவர்களுமான கிருஷ்ணசாஸ்திரிகள் என்கிற வித்வான் ஆர்ய தர்மம் பத்திராதிபருக்குச் சண்டாளஜாதி தத்வ நிரூபண விஷயமாய்த் தம்முடைய கருத்தைவெளியிடும் இந்த பத்திரிகையைக் கொடுத்தார்.

எனது நண்பரான கும்பகோணம் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் மஹோபதேசக கவிரத்னம் பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேசசாஸ்திரியார் அவர்களால் வெளியிடப்பெற்ற "சண்டாளஜாதி தத்வ நிரூபணம்" என்ற புஸ்தகத்தைக் கண்ணுற்றேன். அவர்கள் பெயருக்கேற்ப ஒவ்வொரு விஷயத்தையும் சுருதி, ஸ்மிருதி, யுக்தி அனுபவம் என்ற நான்கு முறையாக விசாரித்துச் "சண்டாள ஜாதி என்பது நான்கு வர்ணங்களுக்குப் புறம்பான ஐந்தாவது ஜாதியே. அது வேதம், ஸ்மிருதி முதலியவைகளிற் சொல்லப்பட்டதே, வேதத்தில் அதைப்பற்றிச் சொல்லப்படவேயில்லை என்ற சிலரின் கூற்று அபத்தமாகுமே" என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

இன்னும் 'ராஜீபவ்யவஹாரங்களுக்கும், வர்ணாச்ரமதர்மத்திற்கும் சம்பந்தமேயில்லை' என்றும், தீண்டாமை என்பது அதிக அவசியமானது, அது நமக்குள்ளேயே அநாதிகாலமாய் இருந்து வருன்கிறது என்றும் நன்குவிளக்கியிருக்கிறார்கள். ராஜீயவாதிகளில் சிலரும் இதை அங்கீகரிக்கின்றனர். இது நிற்க, தற்காலம் மேல்நாட்டு நாகரீகத்திலீடுபட்டு நமது நாட்டுக்கலைகளையும் நூல்களையும் நன்கு பயிலாது அயல் நாட்டினரால் தங்கள் புத்திக் கெட்டியவாறு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களைப்படித்து இது இல்லை, இது பிசகு" என்று கண்டவாறு எழுதவும், உபன்யாசம் செய்யவும் சிலர் கிளம்பிவிட்டனர்.

முன்னாளில் 'வேனன்' என்ற ஒருவனாலேயே 'வர்ணஸங்கரம்' செய்யப்பட்ட இந்நாடு மிகுதியும் கலக்கமுற்றது. இப்பொழுதோ அவனைப்போல் அனேகர் கிளம்பித்தங்களைக் கெடுத்துக்கொண்டதும் அல்லாமல் பிறரையும் கெடுக்க முயலுகின்றனர். அந்தோ! பரிதாபம்! இது கலியின் கொடுமையேயன்றி வேறன்று, ஆகையால் ஆஸ்திகர்களும் பாமரஜனங்களும் அவர்களுடைய மாயவலையில் விழாது தாய்ப் பாஷையில் எளிய நடையில் பாமரஜனங்களும் ஐயந்திரிபற அறியும்படி வெளியிடப்பட்ட இந்தப் புஸ்தகத்தைப்படித்து ஸந்தேகந்தீர்த்துக் கொள்ளுவார்களென்று நினைக்கிறேன். பிர்மஸ்ரீ சாஸ்திரி அவர்கள் அத்யந்த லோகோபகாரமானதும் தனது ஸோதரரான பிர்மஸ்ரீ வேதாந்த கேஸரீ மஹாமஹோபாத்தியாய கணபதிசாஸ்திரியவர்களால் எழுதப்பட்டதுமான வயோநிர்ணயம் என்ற நூலுக்குத் தான் ஒரு வியாக்கியானத்தையும் ஜாதிநிர்ணயம் என்கிற ஒரு கிரந்தத்தையும் இயற்றி வெளியிட்டிருக்கின்றார். இன்னும் இது போன்ற அவசியமான நமதுமததத்வங்கள் நிறைந்த புஸ்தகங்களை அடிக்கடி வெளியிடவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு ஆஸ்திகர்களும் இவ்வித விஷயத்தில் ஊக்கமெடுத்துக்கொண்டு அன்னாருக்கு உதவிபுரிய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மஹாமஹோபாத்தியாய
சி. தண்டபாணிஸ்வாமிதீக்ஷிதர்,
பிரின்ஸ்பல்,
ஸ்ரீ மீனாக்ஷிஸம்ஸ்கிருதகாலேஜ், சிதம்பரம்.

ஸ்ரீமான் "கவிரத்நம்" பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் எழுதிய "சண்டாளஜாதி தத்வ நிரூபணம்" என்ற கிரந்தத்தை அடி முதல் நுனிவரைப் பார்த்து அடங்கா மகிழ்ச்சி அடைந்தேன். தென்னாட்டுச் சிறந்த பண்டிதர்களுள் ஒருவராகிய நம் சாஸ்திரியார் தமக்குள்ள தர்மசாஸ்திர பாண்டித்யத்தையும் யுக்திவல்லமையையும் இந்நூலில் நன்கு வெளிப்படுத்தியிருக்கின்றார். தர்ம சாஸ்திரங்களின் கருத்தை அறியாமல் தத்தமக்குத் தோன்றிய சில போலி யுக்திகளைக் கூறிக்கொண்டும், தேச முன்னேற்றம் என்ற சொல்லைச்சொல்லிப் பலரையும் மயங்கச் செய்துகொண்டும் ஆங்காங்குச் சுற்றித்திரியும் கலிகால தர்மசாஸ்திரிகள் மலிந்து வரும் இந்நாளில், இவ்வண்ணம் மஹர்ஷிகளுடைய கொள்கைகளையும் ஜாதிகளின் வியவஸ்தையையும் பிரமாணங்களுடன் எடுத்துக்காட்டும் இத்தகைய நூலை நம் சாஸ்தியார் வெளியிட்டதற்காக உண்மைப் பாரதபுத்திரர்கள் அன்னாரிடம் மிகவும் நன்றியறிவுள்ளவராய் இருக்கவேண்டும். ஜாதி கர்மாநுகுணமாக பிறவியினாலேயே வருகின்றதென்பதையும், அந்தந்த ஜாதிக்கேற்ற தருமங்களைச்செய்து அவரவர் அடுத்தஜன்மத்தில் முக்திபெறலாமென்பதையும், நான்கு ஜாதிக்குப் புறம்பாக சண்டாள ஜாதி என்று ஒரு ஜாதி உண்டென்பதையும் சாஸ்திரியார் வெகு அழகாகப் பிரமாணங்களைக்காட்டி ஸ்தாபித்திருக்கின்றார். இந்நாலிலுள்ள "யுக்தி விசாரம்" என்னும் பாகம் தலைசிறந்து விளங்குகின்றது. மற்றவர் சொல்லும் நான்கு பயன்களில் ஒவ்வொன்றையும் யுக்தியால் விசாரித்து, அதன் பொருந்தாமையைத் திடம்படக் காட்டியிருக்கும் பான்மையைப்பார்க்க என்மனம் குதூஹலிக்கின்றது. மஹாத்மாவைப்பற்றி சாஸ்திரியார்கொண்ட கருத்துத்தான் எனக்கும் நெடுநாளாக இருந்துவருகிறது. இந்தப் புஸ்தகத்தை நன்றாகப் படித்துப்பார்ப்பின் மஹாத்மாஜியும், அவருடைய உண்மைச் சிஷ்யர்களும் மனமாறுதல் அடைவார்களென்பது எனது துணிவு. இந்நூல் முதலில் இங்கிலீஷிலும் பிறகு பல தேசபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டால், ஆஸ்திகர்களெல்லார்க்கும் இதுபெரிதும் உபகாரமாயிருக்குமாகையால், அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு சாஸ்திரியார் அவர்களையும், மற்றைத் தேசாபிமானிகளையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

அபிநவ பட்ட பாண

கும்பகோணம்,
6—8—25.

ரா. வே. கிருஷ்ணமாசாரியார்,
ஸம்ஸ்கிருத பண்டிதர்,
ராஜாங்கக் கலாசாலை, கும்பகோணம்.

உ

ஸ்ரீகுருப்யோ நம: ॥

சண்டாளஜாதி தத்வ நிருபணம்.

चण्डालाख्या लसति भुवने यात्र जातिः प्रसिद्धा
लोकैश्शास्त्रैरपि सुविदिता रूढमूला चिराय ।
तादृग्जातिर्न भवति पृथक्छूद्रजातेरिति स्वं
निर्मूलं हा मतमिति वृथा केचिदाचक्षतेऽद्य ॥

இவ்வுலகில் சாஸ்திரங்களாலும் ஜனங்களாலும் நன்கறியப்பட்டதாயும், வெகுகாலமாய் அனுஷ்டானத்திலும் நடைபெற்று வருகிறதுமான யாதொரு ஜாதியானது சண்டாளனென்கிற பெயருடன் பிரசித்தமாய் விளங்கிவருகின்றதோ அந்த ஜாதியை சூத்திர ஜாதியின் ஓர்விதப் பிரிவென்றும், சூத்திரர்களைக் காட்டிலும் வேறான சண்டாளனென்று ஓர் ஜாதி கிடையாதென்றும் சிலர் யாதொரு பிரமாணமுமில்லாமல் தம் சொந்த அபிப்பிராயத்தை மாத்திரம்கொண்டு வீணில் பெருங் கூச்சலிடுகிறார்கள். அந்தோ!

सच्छास्त्रयुक्तिभिरहं प्रतिपाद्य तेषा-
मेषा न दोषसहिता फणितिर्वरेति ।
मन्वादिभिः प्रकटितं निगमार्थसार-
सिद्धान्तमद्य कथये जनताहिताय ॥

சாஸ்திரங்களாலும் அவைகளுக்கு விரோதமில்லாத யுக்திகளாலும் சண்டாள ஜாதி இல்லை என்கிற சிலருடைய தோஷத்தோடு கூடிய வசனத்தைச் சரியல்லவென்று நிருபித்து மனு முதலான மஹரிஷிகளால் பிரசித்தி பண்ணப்பட்ட வேதார்த்தங்களின் ஸாரபூதமான ஸித்தாந்தத்தை ஜனங்களின் ஹிதத்தை யுத்தேசித்து நான் வெளியிட முன்வருகிறேன்.

தற்காலம் ராஜீப முன்னேற்றத்திற்கு மிக்க அவசியமென்று "மஹாத்மா" காந்தி அவர்களால் கருதப்படும் தீண்டாமை ஒழித்

தல் என்ற விஷயத்தைப்பற்றி நாம்ஹிந்துக்கள் இன்னும் போது மானபடி விசாரிக்க ஆரம்பிக்கவில்லை. கீழ் ஜாதிக்காரர்களை மேல் ஜாதியார் மரியாதையாய் அபிமானத்துடன் நடத்திவரவேண்டு மென்று மாத்திரம் காந்தியவர்கள் சமீபகாலம்வரை சொல்லிவந் தார்கள். அவ்விஷயத்தில் எந்த ஹிந்துவுக்கும் ஆக்ஷேபணை இருக்கக்கூடியதில்லை. ஆனால் கொஞ்சகாலமாய் பல காரணங் களினால் தன்னிடம் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் விசுவாஸத் தினால் தைரியங்கொண்டு தீண்டாமையைப்பற்றி சாஸ்திர விஷய மாகவும் பேசத்துணிந்துவிட்டார். தான் ஹிந்துமதத்தைப் பற்றி அதிகமாய் வாசித்தது கிடையாதென்றும் தனக்கிருக்கும் அல்ப ஞானமும் மொழிபெயர்ப்புகள் மூலமாய்தான் ஏற்பட்டிருக்கிற தென்றும் அவர் ஒப்புக்கொண்டு வெகுநாள் ஆகவில்லை. இப் பொழுதோவெனில் தான் "ஸநாதனி ஹிந்து" என்றும் தீண்டா மையைப்பற்றி சாஸ்திரங்களில் எவ்வித ஆதாரமும் கிடையா தென்றும் உத்கோஷிக்க ஆரம்பித்துவிட்டார். அவர் எந்தமட் டில் "ஸநாதனி ஹிந்து" என்றும் அவருடைய நோக்கப்படி "ஸநாதன மதம்" என்றால் என்ன என்றும் விசாரிக்கவேண்டிய விஷயம் வேறு. இருந்தாலும் அவரை "ஸநாதனி ஹிந்து"என்று ஒப்புக்கொண்டாலுமே தான் சொல்வது சரிதானா என்றுகூட விசாரித்துக் கொள்ளாமல் இவ்வளவு தைரியமாய் இவ்வளவு பெருமை வாய்ந்தவர் சொல்லத் தலைப்பட்டால் கலியின் வலிமை யைத் தவிர வேறு என்னகாரணம் சொல்லமுடியும். ஒரு தர்ம சாஸ்திர புஸ்தகத்தையேனும் திருப்பிப்பாராமல் அவைகளில் இல்லையென்று மாத்திரம் சொல்ல எப்படி தைரியம்வந்ததோ தெரியவில்லை. கீழ்ஜாதியார்களுக்கு வேண்டிய லௌகிக சௌகரி யங்கள் செய்துகொடுத்து அவர்கள் சாப்பாட்டுக்குத் திண்டா டாமல் செய்யவும், அவர்களிடமிருக்கும் குடிமுதலிய துராசாரங் களை நிவர்த்திக்கவும் பிரயத்தினம் செய்யவேண்டுமென்று அவர் சொன்னால் எல்லா ஹிந்துக்களுமே அவருடன் ஒத்து வேலை செய்ய சம்மதிப்பார்கள். அதன்னியில் பிராசீன ஸ்மிருதிகர்த்தர் களான மனு, யாக்ஞ்யவல்க்யர்,பராசரர் முதலியோர்களின்கோஷ் டியில் தன்னையும் சேர்த்துக்கொண்டு தான் சொல்லும் வார்த்தை

களையும் பிரமாணமாய் அங்கீகரிக்கவேண்டுமென்று அவர் கேட்க ஆரம்பித்திருக்கிறார். அவரிடம் தற்காலம் சிலர்களுக்கிருக்கும் மோஹத்தின் பலத்தினால் அவர்கள் உள்பட்டாலும் படலாம். சாதாரணஜனங்கள் உள்படமாட்டார்களென்பதில்சந்தேகமில்லை. இருந்தாலும் தற்காலம் சாஸ்திரபிரக்ஞையுள்ளவர்கள் மிகக்குறை வாயும், சாஸ்திர பிரக்ஞை ஆடோபம் மிக ஜாஸ்தியாகவும் இருப் பதால் காந்தியவர்கள் சொல்கிறபடி சாஸ்திரங்களில் தீண்டாமை விஷயமான வசனங்கள் கிடையாதோவென்று சாமானிய ஜனங் கள் சந்தேகிக்கக்கூடியது சகஜமாயிருப்பதால் அவர்களுக்கு இருக்கும் சந்தேகத்தைப்போக்கி சாஸ்திரங்களின் உண்மையை அறிவிக்கவேண்டி அவ்வசனங்களில் சிலவற்றை எடுத்து எழுத லாமென்று உத்தேசிக்கிறேன்.

தற்காலம் ஆஸ்திகர்களில்கூட சிலர்கள் நம்மதத்தில் "சாதுர் வர்ண்யம்" என்று சொல்வதால் நாலு ஜாதிகளுக்குமேல் கிடை யாதென்றும் பஞ்சமர்களென்று சொல்லப்படும் ஜாதிகளும் இந்த நான்கு ஜாதிகளுக்குள் அந்தர்பாவமடைய வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அவ்வபிப்பிராயத்திற்கும் சாஸ்திர பர்யாலோசனையின்மையே காரணம். பொதுவாக சாதுர்வர்ண்ய மாகத்தான் ஹிந்துஜன ஸமூஹம் ஏற்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் முன் யுகங்களில் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களில் மேல்ஜாதியார் கீழ்ஜாதிப் பெண்களை விவாஹம் செய்துகொள்ளலாமென்று சாஸ்திரத்தில் அனுமதி யிருந்தபடியாலும், சாஸ்திர அனுமதியை எதிர்பாராமலே காமப் பிரவிருத்தி இருக்கக்கூடியதாலும் ஸங்கர ஜாதிகள் ஏற்பட்டே தீருமென்பதை நன்கு உணர்ந்து அவர்களுக்கும் சாதுர்வர்ண்ய ஏற்பாட்டில் ஸ்தானங்கள் தீர்மானம்செய்து அவர்களுக்குறிய தர்மங்களையும் சாஸ்திரங்களே விதித்திருக்கின்றன. அனுமதிக்கப் பட்ட சம்பந்தங்களால் ஏற்படும் பிரஜைகளுக்கு அனுலோமர்கள் என்றும் விபரீதர்களுக்கு பிரதிலோமர்கள் என்றும் பெயர். ஸமான ஜாதியார்களுக்குள் விவாஹமானால் பிறக்கும் பிரஜை களுக்கு ஸஜாதீயர் என்றே சொல்லப்படும். இவ்விதமாக ஸஜா தீயர் நான்கு :—

1.	பிராஹ்மணன்	(பிராஹ்மண	தகப்பன்,	பிராஹ்மண	தாயார்)
2.	க்ஷத்திரியன்	(க்ஷத்திரிய	,,	க்ஷத்திரிய	,,
3.	வைசியன்	(வைசிய	,,	வைசிய	,,
4.	சூத்திரன்	(சூத்திர	,,	சூத்திர	,,

அநுலோமர்கள் ஆறு:—

1.	மூர்த்தாவஸிக்தன்	(பிராஹ்மண	தகப்பன்,	க்ஷத்திரிய	தாயார்)
2.	அம்பஷ்டன்	(,,	,,	வைசிய	,,
3.	நிஷாதன்	(,,	,,	சூத்திர	,,
4.	மாஹிஷ்யன்	(க்ஷத்திரிய	,,	வைசிய	,,
5.	உக்கிரன்	(,,	,,	சூத்திர	,,
6.	கரணன்	(வைசிய	,,	,,	,,

பிரதிலோமர்களும் ஆறு:—

1.	ஸூதன்	(க்ஷத்திரிய	தகப்பன்,	பிராஹ்மண	தாயார்)
2.	வைதேஹன்	(வைசிய	,,	,,	,,
3.	மாகதன்	(,,	,,	க்ஷத்திரிய	,,
4.	ஆயோகவன்	(சூத்திர	,,	வைசிய	,,
5.	க்ஷத்தா	(,,	,,	க்ஷத்திரிய	,,
6.	சண்டாளன்	(,,	,,	பிராஹ்மண	,,

மேல்கண்ட மூன்றுவித வகுப்புகளுக்குள் தாரதம்யத்தைச் சொல்லுங்கால் தேவல மஹரிஷி விதிப்பதாவது:—

तेषां सवर्णजाः श्रेष्ठाः तेभ्योऽन्वगनुलोमजाः ।
अन्तराला बहिर्वर्णाः पतिताः प्रतिलोमजाः ॥

"அவர்களுள் ஸமானஜாதி சம்பந்தத்தால் ஏற்பட்டவர்கள் சிரேஷ்டர்கள். அவர்களுக்கு அடுத்தபடி அநுலோமஜர்கள். ஸங்கரஜாதிகளில் பிரதிலோமஜர்கள் நான்கு வர்ணங்களில் சேராமல் பதிதர்களாவார்கள்."

அப்படியே யாக்ஞ்யவல்க்ய முனிவரும் சொல்கிறார்:—

असत्सन्तस्तु विज्ञेयाः प्रतिलोमानुलोमजाः ॥

"பிரதிலோமர்கள் கெட்ட ஜாதியார்களென்றும், அனுலோமர்கள் நல்ல ஜாதியார்களென்றும் அரியவும்."

மேல்கண்ட ஜாதிகளைப் பரிசீலனம் பண்ணும்பொழுது நிஷித்த சம்பந்தத்தால் ஏற்பட்ட பிரஜைகளான பிரதிலோமஜர்கள் வர்ணதர்மத்திற்கு உள்படாதவர்களென்று நன்ருய் விளங்கும். அனுலோமஜர்களில் மூர்த்தாவஸிக்தன், அம்பஷ்டன், மாஹிஷ்யன் இம்மூன்று பேர்களுக்கும் பெற்ருேரிருவரும் த்விஜர்களாயிருப்பதால் அவர்களுக்கு தங்கள் தங்கள் தாயார் ஜாதியின் கௌரவத்தைப்பெற்று அவர்களும் த்விஜர் என்றே எண்ணப்படுகிருர்கள். மற்றும் மூன்று அனுலோமர்களுக்கு தகப்பனுர் த்விஜனுயிருந்தபோதிலும் தாயார் த்விஜவகுப்பில் சேராததினுல் அவர்கள் த்விஜராகமாட்டார்கள். அவ்விதமே பிரதிலோமஜர்கள் வர்ணதர்மத்திற்கு உள்படாமலிருந்தபோதிலும் அவர்களுக்குள் ஸூதன், வைதேஹன், மாகதன் இம்மூவர்களுடைய பெற்ருேரும் திவிஜராயிருப்பதால் சூத்திரத் தகப்பனுக்குப் பிறந்த மற்ற மூன்று பிரதிலோமஜர்களைவிட மேல்ஜாதி யென்று சொல்லப் படுகிருர்கள்.

प्रतिलोमास्तु धर्महीनः । शूद्रायां च । असमानायां च शूद्रात पतितवृत्तिः । अन्त्यः पापिष्ठः ।

"பிரதிலோமமாயிருப்பதால் தர்மஹீனர்கள். அவ்விதமே சூத்திர ஸ்திரீயிடம் பிறந்தவர்களும். சூத்திர தகப்பனுக்கும் மேல்ஜாதி தாயாருக்கும் பிறந்தால் பதிதனுவான். அவர்களுள் கடைசி (சண்டாளன்) மிகவும் பாபமுள்ளவன்" என்று கௌதமர் ஸூத்திரம். இவ்விடத்தில் "தர்மஹீனர்கள்" என்ற பதத்தில் "தர்மம்" என்பது உபநயனம் முதலான விசேஷ தர்மத்தைக் குறிக்குமேயல்லாமல், சாமான்னிய தர்மத்தைக் குறிக்காது. அஹிம்ஸை, ஸத்தியம் முதலிய சாதாரண தர்மங்கள் மனுஷிய சாமான்யத்திற்கு உண்டு.

தீண்டாமை என்ற அஸ்பிருச்ய தோஷமானது மேல்கண்ட பிரதிலோமஜர்களில் கடைசி மூன்று, அதாவது, சூத்திரத் தகப்ப

னுக்கு மேல்ஜாதி ஸ்திரீகளிடத்தில் பிறந்த ஜாதியார்களுக்குமாத்திரம்தான் உண்டு. அவர்களைத்தான் கௌதமரும் "பதிதர்" என்று சொன்னார். கடைசி (अन्त्य அந்த்ய) வர்ணமான சூத்திரனுக்குப் பிறந்தமையால் அந்த ஜாதியார்களுக்கு अन्त्यज அந்த்யஜர் என்றும் பெயருண்டு. இவ்வந்த்யஜர் இதர ஜாதியார்களுடன் சம்பந்தப்பட்டு பிறக்கும் பிரஜைகளுக்கும் அந்த்யஜர் என்றே சொல்லலாம். அந்த்யஜர்களுக்குள் சண்டாளன் பாபிஷ்டன் யென்று சொல்லப்பட்டமையால் சாதாரண அந்த்யஜர்களைவிட சண்டாளன் விஷயமாய் ஜாஸ்தி கடுமையான விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த விதிகளை வெளியிடுவதற்குமுன் சுருதியில் தீண்டாத ஜாதி என்று ஒரு ஜாதிப்பெயர் இருப்பதாகக்கூடச் சொல்லப்படவில்லை என்று பிரசித்திபெற்ற பலர் பப்ளிக் மீட்டிங்கில்கூட தைரியமாய் பேசுகிறார்கள். அவர்கள் வார்த்தை எவ்வளவுவரையில் உண்மை என்பதை முந்தி விசாரித்துப் பிறகு இதர பிரமாணங்களையும் கவனிப்போம்.

பிருஹதாரண்யகம் நாலாவது அத்யாயம் மூன்றாவது பிராமணம் 22-வது மந்திரபாஷ்யத்தில் ஸுஷுப்தி அவஸ்தையில் சகல தர்மங்களும் விலகிவிடுகின்றன என்று கூறிவரும் பிரகாணத்தில் ஸுஷுப்தி அவஸ்தையில் சண்டாளன், அசாண்டாளன், பல்கஸன், அபுல்கஸன் என்று ஸ்பஷ்டமாயிருக்கின்றது. சண்டாளனும், புல்கஸனும் அப்படி இல்லாதவனாகிறான் என்கிற கருத்துக்கொண்ட இந்த சுருதி வாக்கியத்தின் அவதாரிகா பாஷ்யத்தில் தற்காலத்திலுண்டாகும் கர்மத்தால் மாத்திரம் விடுபடுவானென்பதில்லை. ஆனால் வேறென்னவெனில் மிகவும் தாழ்ந்த ஜாதியை அடைவிக்கும் இயற்கையான கர்மத்தாலும் விடுபட்டவன்தான் இவன் என்றுகூறி பிறகு சண்டாளனென்பவன் பிராமணஜாதி ஸ்திரீயினிடத்தில் சூத்திரஜாதி புருஷனுக்கு உண்டானவன் என்றதினால் சண்டாளன் மிகவும் தாழ்ந்த ஜாதி என்று வியாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் சண்டாளன் என்று ஒருஜாதி உண்டென்றும் அவன் மிகவும் தாழ்ந்த ஜாதி என்றும் நன்கு வெளியாகவில்லையா?

இதுமாத்திரமல்ல. தைத்திரீயப்பிராமணம் 3-வது அஷ்டகம், 4-வது பிரச்னம், 14, 17-வது அனுவாகத்தில் சாண்டாளனென்றும், பௌல்கஸனென்றும் பதங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. பின்னும் ஸ்ரீ ருத்திரத்தில் 4-வது அனுவாகம் 8வது மந்திரத்தில் ஈச்வரனுக்கு ஸர்வாத்மகத்வத்தைக் கூறுமிடத்தில், நிஷாதரூபரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நிஷாத என்கிற அந்தப் பதத்திற்குப் பரமஹம்ஸபரிவிராஜகஸார்வபௌம ஸ்ரீமத பிநவ சங்கராசார்யரவர்கள் பாஷ்யத்தில் சண்டாளன் என்கிற பொருளை வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விதம் சுருதியில் பலவிடங்களில் சண்டாளபதப் பிரயோகம் ஸ்பஷ்டமாயிருக்க இந்த வார்த்தையே சுருதியில் கிடையாதென்று ஸதஸ்ஸில் தைரியமாகக்கூறி சாமானிய ஜனங்களை வஞ்சிப்பது எவ்வளவு ஸாஹஸமான காரியம்.

இனி அவன் அசுத்தனென்று சொல்வதற்கு ஆதாரமான சுருதியையும் வெளியிடுகிறோம்.

சாந்தோக்கிய உபநிஷத்தில், ஐந்தாவது அத்தியாயத்தில் அக்கினிஹோத்திரம் முதலிய புண்யகர்மங்களின் பயனை அனுபவிக்க சுவர்க்கலோகம் சென்றவர்கள் அங்கு அனுபவிக்கக்கூடிய பயனை அனுபவித்துப் பிறகு இவ்வுலகத்திற்குத் திரும்புகிறார்கள். அவர்களுக்குள் எவர்களுக்கு பாபகர்மங்கள் பலாபிமுகமாக (அதாவது பலனையளிக்கும் திரமைவாய்ந்தனவாக) இருக்கின்றனவோ அவர்கள் தாழ்ந்த யோனியிற் பிறக்கின்றார்கள் என்றும், அதிலும் நாய் ஜாதியிலாகிலும், பன்றி ஜாதியிலாகிலும், சண்டாள ஜாதியிலாகிலும் ஜனிக்கிறார்கள் என்றும் சுருதி ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றது. இங்கு வெளியிடப்பட்ட சுருதிகளாலும் அவைகளின் பாஷ்யங்களாலும் சண்டாளன் என்று ஓர் ஜாதி உண்டென்றும் அது கீழான ஜாதி என்றும் நன்கு நிரூபிக்கப்பட்டிருப்பினும் இதைச் சற்றும் கவனியாமலும், பிறர் கவனிப்பார்களே என்கிற எண்ணமில்லாமலும் சுருதியில் சண்டாளன் என்கிற பதமே கிடையாதென்று தம் வாக்கையே சுருதியாகக் கருதிய சிலர் ஸபைகளிலும், பத்திரிகைகளிலும் எங்ஙனம் பறையறையத் துணிகிறார்களோ தெரியவில்லை. அந்தோ!

சண்டாளன் என்கிற பெயர்கூட சுருதிகளில்இல்லை என்று சிலருக்கு ஏற்பட்டிருந்த சங்கையை எம்மால் அறியப்பட்ட சில சுருதிவசனங்களை நிரூபித்து நிவர்த்திசெய்தோம். இனி ஸ்மிருதிகள் இத்தீண்டாமை விஷயமாய் எவ்விதம் கருதுகின்றன என்பதையும் விசாரிக்கவேண்டியது அவசியமாகையால் அவைகளில் பிரஸித்திபெற்ற மனுஸ்மிருதியின் அபிப்பிராயத்தை முந்திவெளியிட்டுப்பின்மற்றுமுள்ள ஸ்மிருதிகளின்கருத்தையும்கவனிப்போம்

1. மனு பிரதிலோமஜாதியைக் கூறுமிடத்தில்.

शूद्रादायोगवः क्षत्ता चण्डालश्चाधमो नृणाम् ।
वैश्यराजन्यविप्रासु जायते वर्णसङ्करः ॥ 10-12.

சூத்திரனிடமிருந்து முறையே வைசிய, க்ஷத்திரிய, பிராம்மண ஜாதிகளிலுண்டான ஸ்திரீகளிடம் ஏற்படும்சந்ததிகளுக்கு ஆயோகவன், க்ஷத்தா, சண்டாளன், என்றுபெயர். இவர்களுக்குள் சண்டாளனென்பவன் ஜாதியினால் தாழ்ந்தவன் என்று மனு கூறியிருக்கிறார்.

மறுபடியும் இதே அபிப்பிராயத்தை

आयोगवश्च क्षत्ता च चण्डालश्चाधमो नृणाम् । 10-16.

ஆயோகவன், க்ஷத்தா, சண்டாளன் இம்மூன்றுபேர்களும் மானிடஜாதிகளில் தாழ்ந்தவர்கள் என்றும் மொழிந்திருக்கிறார். இவ்விதம்கூறிப் பிறகு சண்டாளர்கள் வஸிக்கவேண்டிய ஸ்தானத்தையும் இயற்கையாய் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களையும் அடியில் வருமாறு அவரே வெளியிடுகின்றார்.

चण्डालश्वपचानां तु बहिर्ग्रामात्प्रतिश्रयः ।
अपपात्रश्च कर्तव्या धनमेषां श्वगर्दभम् ॥ 10-51.
वासांसि मृतचेलानि भिन्नभाण्डेषु भोजनम् ।
कार्ष्णायसमलङ्कारः परिव्रज्या च नित्यशः ॥ 52.
न तैस्समयमन्विच्छेत् पुरुषो धर्ममाचरन् ।
व्यवहारो मिथस्तेषां विवाहस्सदृशैस्सह ॥ 53.

अन्नमेषां पराधीनं देयं स्याद्भिन्नभाजने ।
रात्रौ न विचरेयुस्ते ग्रामेषु नगरेषु च ॥ 54.
दिवाचरेयुः कार्यार्थं चिह्निता राजशासनैः ।
अबांधवं शवञ्चैव निर्हरेयुरिति स्थितिः ॥ 55.
वध्यांश्च हन्युः सततं यथाशास्त्रं नृपाज्ञया ।
वध्यवासांसि गृह्णीयुः शय्याश्चाभरणानि च ॥ 56.

"சண்டாளன், சுவபசன் இவர்களுக்குக் கிராமத்திற்கு வெளியில்தான் குடியிருப்பு, அவர்களிடம் பாத்திரங்கள் இருக்கக் கூடாது, அவர்களுடைய சொத்து நாயும் கழுதையும், பிரேத வஸ்திரங்கள்தான் வஸ்திரம், போஜனம் உடைந்த சட்டிகளில் தான், ஆபரணம் இரும்பினால் செய்தது, எப்பொழுதும் அலேச்சல். தர்மம் அனுஷ்டிக்கும் எவனும் அவர்களுடன் ஒப்பந்தம் செய்யக்கூடாது. அவர்கள் வியவகாரங்கள் அவர்களுக்குள்தான். விவாஹமும் அவர்களுக்குச் சமானமானவர்களுடன்தான். அவர் களுக்கு அன்னம் உடைந்த பாத்திரத்தில்வைத்து வேறொருவ னால் கொடுபடவேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் ராத் திரி காலத்தில் சஞ்சாரம் செய்யக்கூடாது. பகலில் ராஜாவின் உத்திரவினால் அடையாளம் செய்யப்பட்டவர்களாகக் காரியத் தை உத்தேசித்து மாத்திரம் சஞ்சரிக்கலாம். பந்துக்களில்லாத பிரேதத்தை அவர்கள் அப்புறப்படுத்தவேண்டுமென்று ஏற்பாடு. ராஜாக்ஞையால்கொலே செய்யவேண்டியவர்களை சாஸ்திரானுசார மாகக் கொலே செய்யவேண்டியது. கொலே செய்யப்பட்டவர்க ளுடைய வஸ்திரங்களையும், படுக்கைகளையும், ஆபரணங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டியது."

பின்னும்,-दिवाकीर्तिमुदक्यां च पतितं सूतिकां तथा ।
शवं तत्स्पृष्टिनं चैव स्पृष्ट्वा स्नानेन शुध्यति ॥ 5-88.

சண்டாளன், பஹிஷ்டாஸ்திரீ, பதிதன், பிரஸவித்தவள், பிரேதம் இவர்களைத்தொட்டவன் ஆகிய இவர்களைத்தொட்டால் ஸ்நானம் செய்து சுத்தியடைகிறான் என்று மனு 5-வது அத்தியாயத்தில் கூறியிருக்கிறார்.

2. கௌதம ஸூத்திரம்.

पतितचण्डालसूतिकोदक्याशवस्पृष्टितत्स्पृष्टस्पर्शने सचेलमुदकोपस्पर्शनाच्छुद्धिः ॥

"பதிதன், சண்டாளன், பிரஸவித்தவள், பஹிஷ்டாஸ்திரீ, பிரேதம் இவர்களைத் தொட்டவன், தொட்டவனைத் தொட்டவன் இவர்களைத் தொட்டால் வஸ்திரத்துடன் ஜலத்தில் ஸ்நானஞ் செய்ய சுத்தனுவான்" என்று கௌதமர் கருதுகிறுர்.

३ याज्ञवल्क्यस्मृतौ ।

ब्राह्मण्यां क्षत्रियात्सूतो वैश्याद्वैदेहकस्तथा ।
शूद्राज्जातस्तु चण्डालः सर्वकर्मबहिष्कृतः ॥

பிராமண ஸ்திரீயினிடமிருந்து முறையே க்ஷத்ரியன், வைசியன், சூத்திரன் இவர்களுக்குண்டானவர்கள் ஸூதன், வைதேஹகன், சண்டாளன் என்று கிரமமாகப் பெயரையடைகிறுர்கள். அவர்களுக்குள் சண்டாளன் ஒருகார்மாவுக்கும் அருகமில்லாதவன்.

பிராயச்சித்தாத்தியாயத்தில்.

उदक्या शुचिभिस्स्नायात्संस्पृष्टस्तैरुपस्पृशेत् ।

"பஹிஷ்டாஸ்திரீ அசுசி இவர்களால் தொடப்பட்டால் ஸ்நானம் செய்யவும்" என்ற இடத்தில் அசுசீ என்ற பதத்திற்கு விக்ஞானேச்வரர் இவ்விதம் வியாக்யானம் செய்கிறுர்.

अशुचयः, शवचाण्डालपतितसूतिकाद्याः, शावाशौचिनश्च ।

"அசுசி யென்பது பிரேதம், சண்டாளன், பதிதன், பிரஸவித்தவள் முதலானவர்களும் சாவு தீட்டுள்ளவர்களும்."

அவ்விடத்திலேயே அநேகம் ஸ்மிருதிகளை உதாஹரிக்கிறுர்கள். அவர் வியாக்யானமான மிதாக்ஷரையானது இன்னமும் நம்முடைய வியவகாரங்களில் முக்கிய பிரமாணமாயிருந்துவருவதும் தவிர கோர்ட்டுகளிலும் அதன் பிரமாணத்தை அனுசரித்தே சகல சொத்து பாத்தியங்களும் தீர்மானிக்கப்படுகின்றன. இந்தத்

தீண்டாமை விஷயத்தில் மாத்திரம் அம்மஹானுடைய வாக்குக்குப் பிரமாணம் கிடையாதென்று யாரால் சொல்லமுடியும் ?

४ देवलः ।

श्वपाकं पतितं व्यङ्गमुन्मत्तं शवहारकम् ।
सूतिकां साविकां नारीं रजसा च परिप्लुताम् ॥
श्वकुक्कुटवराहांश्च ग्राम्यान्संस्पृश्य मानवः ।
सचेलस्सशिरास्स्नात्वा तदानीमेव शुध्यति ॥

"சண்டாளன், பதிதன், அங்கஹீனன், பைத்தியம், பிரேதம் சுமப்பவன், பிரஸவித்தஸ்திரீ, பிரஸவம் பார்த்தவள், பஹிஷ்டா ஸ்திரீ, நாய், கோழி, பன்றி இவர்களைத்தொட்ட மனிதன் வேஷ்டியுடன் தலையை நனைத்து ஸ்நானம்செய்தால் உடனே சுத்தியாகிறான்." (தேவலர்)

பின்னும்- चण्डालकूपभाण्डस्थमज्ञानादुदकं पिबेत् ।
स तु त्र्यहेण शुध्येत शूद्रस्त्वेकेन शुध्यति ॥

"சண்டாளர்களுடைய கிணறு, பாத்திரம் இவைகளிலுள்ள ஜலத்தைத் தெரியாமல் சாப்பிட்டால் மூன்றுநாள் உபவாஸத்தால் சுத்தியடைகிறான். சூத்திரன் மாத்திரம் ஒருநாளில் சுத்தமாகிறான்." (தேவலர்)

5. வியாக்ரபாதர்.

चण्डालं पतितञ्चैव दूरतः परिवर्जयेत् ।
गोवालव्यजनादर्वाक्सवासा जलमाविशेत् ॥

"சண்டாளன், பதிதன் இவர்களைக்கண்டால் தூர விலக வேண்டும். பசுவின் வால்வீசும் தூரத்திற்குக்குறைந்தால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டும்" இவ்வசனம் விலக இடமில்லாத சமயத்திற்கு ஏற்பட்டது.

6. விசாலமாக இடமிருந்தால் பிரகஸ்பதி பகவான்,

युगं च द्वियुगं चैव त्रियुगं च चतुर्युगम् ।
चण्डालसूतिकोदक्या पतितानामधःक्रमात् ॥

பதிதனுக்கு ஒரு நுகத்தடிதூரமும், பஹிஷ்டாஸ்திரீக்கு இரண்டும், பிரஸவித்தவளுக்கு மூன்றும், சண்டாளனுக்கு நான்கும் முறையே விலகவேண்டும்.

पतितं सूतिकामन्त्यं शवं स्पृष्ट्वा च कामतः ।
स्नात्वा सचेलं स्पृष्ट्वाग्निं घृतं प्राश्य विशुध्यति ॥

शवस्पृशं दिवाकीर्तिं चितिं यूपं रजस्वलाम् ।
स्पृष्ट्वा तु कामतो विप्रः स्नानं कृत्वा विशुध्यति ॥

பதிதன், பிரஸவித்தவள், அந்தியன், (சண்டாளன்) பிரேதம் இவைகளைத் தெரிந்து தொட்டால், வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்து அக்னியையும் ஸ்பரிசித்து, நெய்யைப் பிராசனம்செய்தால் சுத்தியாகிறான். பிரேதத்தைத் தொட்டவன், சண்டாளன், சிதை, யூபஸ்தம்பம், ரஜஸ்வலை இவர்களைத்தெரிந்து தொட்டபிராமணன் ஸ்நானத்தினால் சுத்தனாகிறான்.

7. அங்கிரஸ்.

यस्तु छायां श्वपाकस्य ब्राह्मणोऽतिरोहति ।
तत्र स्नानं प्रकुर्वीत घृतं प्राश्य विशुध्यति ॥

"சண்டாளனுடைய நிழலை பிராமணன் மிதித்தால் ஸ்நானம் செய்து நெய்யைப் பிராசனம் செய்தால் சுத்தியாகிறான்." (அங்கிரஸ்)

चण्डालपरिगृहीतं तु योऽज्ञानादुदकं पिबेत् ।
तस्य शुद्धिं विजानीयात्प्राजापत्येन नित्यशः ॥

"சண்டாளனால் எடுத்துவைக்கப்பட்ட ஜலத்தைத் தெரியாமல் குடித்துவிட்டால் பிராஜாபத்யத்தினால் எப்பொழுதும் சுத்தியடைகிறானென்று அறியவும். (அங்கிரஸ்)

அங்கிரஸ் ஸ்மிருதியில் வினு.

चण्डालकूपभाण्डेषु यस्त्वपः पिबते द्विजः ।
प्रायश्चित्तं कथं तेषां वर्णे वर्णे विनिर्दिशेत् ॥

தீண்டாதவர்களுடைய கிணற்றிலும், பாத்திரத்திலும் இருக்கும் ஜலத்தைக் குடிக்கும் துவிஜர்களுக்கும், சூத்திரர்களுக்கும் யாது பிராயச்சித்தம் கூறப்பட்டிருக்கின்றது ?

விடை.

चरेत्सान्तपनं विप्रः प्राजापत्यं तु भूमिपः ।
तदर्धं तु चरेद्वैश्यः पादं शूद्रस्समाचरेत् ॥

வேதியராயின் ஸாந்தபனம் என்கிற பிராயச்சித்தத்தை அனுஷ்டிக்கவேண்டும். அரசனாயிருந்தால் பிராஜாபத்தியமென்கிற பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளவேண்டும். வைசிய சூத்திரர்களாயிருப்பின் முறையே பிராஜாபத்தியத்தின் பாதியையும், கால்பாகத்தையும் அனுஷ்டிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. பின்னும்,

यस्तु चण्डालसंस्पृष्टं पिबेत्तोयमकामतः ।
स तु सान्तपनं कृच्छ्रं चरेच्छुद्ध्यर्थमात्मनः ॥ 9.

எவன் சண்டாளனால் ஸ்பர்சிக்கப்பட்ட ஜலத்தை அறியாமல் பானம் செய்கின்றானோ அவன் தனக்குச்சுத்தி ஏற்பட வேண்டியதற்காக கிருச்ரஸாந்தபனம் என்கிற பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளவேண்டும். என்று மறிவிக்கிறார்.

8. ஸம்வர்த்தர்.

चण्डालपतितच्छायां स्पृष्ट्वा स्नानं समाचरेत् ।

"சண்டாளன், பதிதன், இவர்களுடைய நிழலைத்தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டும்" (ஸம்வர்த்தர்)

९ प्रजापतिः ।

अस्नात्वैव यदा भुङ्क्ते पिण्डं दत्वा पितुर्यदि ।
स्पृष्ट्वा शवमुदक्यां वा चण्डालं सूतिकां तथा ।
अकामतस्त्रिरात्रं स्यात् बुद्ध्या सान्तपनं चरेत् ॥

'பிதாவிற்குப்' பிண்டதானம் செய்தபிறகாவது, பிரேதம், ரஜஸ்வலாஸ்திரீ, சண்டாளன், பிரஸவித்தவள் இவர்களைத்தொட்டா

லாவது ஸ்நானம் செய்யாமலே எந்த பிரும்மசாரிபோஜனம் செய்கிறுனோ அவன் தெரியாமல் செய்தால் மூன்றுநாள் உபவாஸமும் தெரிந்து செய்தால் ஸாந்தபனவிருதமும் அனுஷ்டிக்கவேண்டும்" (பிரஜாபதி)

१० व्याघ्रः ।

चण्डालोदक्या संस्पृष्टो स्नानमेव समाचरेत् ।
अस्पृश्यस्पर्शनं कृत्वा यदा भुङ्क्ते गृहाश्रमी ॥
अकामतस्त्रिरात्रं स्यात् षड्रात्रं कामतश्चरेत् ।
यतिश्चैव वनस्थश्च कुर्यातां तौ तदेव तु ॥

"சண்டாளன், பஹிஷ்டாஸ்திரீ இவர்களைத்தொட்டால் ஸ்நானமே செய்யவேண்டும். தொடக்கூடாதவர்களைத் தொட்டுவிட்டு கிருஹஸ்தன் போஜனம் செய்தால், தெரியாமல்செய்தால் மூன்று நாளும், புத்திபூர்வமாய் செய்தால் ஆறுநாளும் உபவாஸம் செய்யவேண்டும். ஸந்யாஸிக்கும் வானப்ரஸ்தனுக்கும் இதேமாதிரி தான்' (வியாக்ரர்)

११ विष्णुः ।

उदक्या शवचण्डाला न स्नेहास्थि नरोद्भवम् ।
स्पृष्ट्वा सचेलः स्नायीत ।

"பஹிஷ்டாஸ்திரீ, பிரேதம், சண்டாளன், பசையில்லாத மனித எலும்பு இவைகளைத்தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவும்"

चण्डालोदकसंस्पृष्टः स्नानं कृत्वा विशुध्यति ।

சண்டாளனுடைய ஜலத்தினுல் தொடப்பட்டவன் ஸ்நாநம்செய்யசுத்தனுகிருன். (விஷ்ணு)

१२ वृद्धयाज्ञवल्क्यः ।

चण्डालपुक्कसम्लेच्छभिल्लपारसिकादिकम् ।
महापातकिनश्चैव स्पृष्ट्वा स्नायात्सचेलकम् ॥

"சண்டாளன், புக்கஸன், மிலேச்சன், பில்லன், பாரஸிகன், முதலானவர்களையும் மஹா பாதகம் செய்தவர்களையும் தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டியது" (விருத்தயாக்ஞவல்க்யர்)

१३ बोधायनः ।

चण्डाळदर्शने ज्योतिषां दर्शनं संभाषणे ब्राह्मणसंभाषणं स्पर्शने स्नानम् ॥

சண்டாளனைப்பார்த்தால் ஸூர்ய, சந்திர, நக்ஷத்திரங்களைப் பார்க்கவும். பேசினால் உடனே பிராம்மணனுடன் பேசவும். தொட்டால் ஸ்நானம் செய்யவும். (போதாயனர்)

14. பராசரர்.

श्वपाकं वापि चण्डाळं विप्रः सम्भाषते यदि ।
द्विजसम्भाषणं कुर्यात् सावित्रीं तु सकृज्जपेत् ॥
चण्डाळैस्सह सुप्तं तु त्रिरात्रमुपवासयेत् ।
चण्डाळैकपथं गत्वा गायत्रीस्मरणाच्छुचिः ॥
चण्डाळदर्शने सद्य आदित्यमवलोकयेत् ।
चण्डाळस्पर्शनेचैव सचेलं स्नानमाचरेत् ॥

சுவபாகன், சண்டாளன், இவர்களுடன் பிராம்மணன் ஸம்பாஷணம் செய்தால் உடனே ஒரு பிராம்மணனிடம் ஸம்பாஷணம்செய்து காயத்திரியை ஒருதடவை ஜபிக்கவேண்டும். சண்டாளர்களுடன் ஒரே இடத்தில் தூங்கினவனை மூன்றுநாள் உபவாஸமிருக்கச் செய்யவேண்டும். சண்டாளனுடன் ஒரே மார்க்கத்தில்போனால் காயத்திரீ ஸ்மரணத்தினால் சுத்தியாகிறான். சண்டாளனைப்பார்த்தால் உடனே சூர்யனைப்பார்க்கவேண்டும். சண்டாளனைத்தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டும். (பராசரர்)

மேலும் चण्डालखातवापीषु पीत्वा सलिलमग्रजः ।
अज्ञानाच्चैकभक्तेन त्वहोरात्रेण शुध्यति ॥

चण्डालभाण्डसंस्पृष्टं पीत्वा कूपगतं जलम् ।
गोमूत्रयावकाहारस्त्रिरात्राच्छुद्धिमाप्नुयात् ॥
चण्डालघटसंस्थं तु यत्तोयं पिबति द्विजः ।
तत्क्षणात्क्षिपते यस्तु प्राजापत्यं समाचरेत् ॥
यदि न क्षिपते तोयं शरीरे यस्य जीर्यति ।
प्राजापत्यं न दातव्यं कृच्छ्रं सांतपनं चरेत् ॥
चरेत्सांतपनं विप्रः प्राजापत्यमनन्तरः ।
तदर्धं तु चरेद्वैश्यः पादं शूद्रस्तथाचरेत् ॥

"சண்டாளர்களால் வெட்டப்பட்ட கிணறுகளிலிருந்து தெரியாத்தனமாய் பிராம்மணன் ஜலம் சாப்பிட்டுவிட்டால் ஒருபகலும் ராத்திரியும் ஒருவேளை ஆகாரத்துடனிருந்தால் சுத்தியாகிறான். சண்டாளனுடைய பாத்திரத்தினால் தொடப்பட்ட கிணற்றுஜலத்தை குடித்தால் கோமுத்திரம் யாவகம் இவைகளைமாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு மூன்றுநாளிருந்தால் சுத்தியடைகிறான், சண்டாளனுடைய குடத்தில் வைத்திருக்கும் ஜலத்தை பிராம்மணன் சாப்பிட்டு உடனே துப்பிவிடுவானாகில் பிராஜாபத்யம் விருதம் இருக்கவேண்டும். துப்பாமல் ஜலம் தேகத்தில் ஜரித்துவிடுமாகில் பிராஜாபத்யம் போதாது. ஸாந்தபன கிருச்ரம் அனுஷ்டிக்கவேண்டும். பிராஹ்மணன் ஸாந்தபனமும், க்ஷத்திரியன் பிராஜாபத்யமும், வைசியன் அதில் பாதியும், சூத்திரன் கால்பங்கும் அனுஷ்டிக்கவேண்டியது"

பின்னும்-भाण्डस्थमन्त्यजानां तु जलं दधि पयः पिबेत् ।
ब्राह्मणः क्षत्रियो वैश्यश्शूद्रश्चैव प्रमादतः ॥
ब्रह्मकूर्चोपवासेन द्विजातीनां तु निष्कृतिः ।
शूद्रस्यचोपवासेन तथा दानेन शक्तितः ॥

"சண்டாளன் உள்பட எல்லா அந்த்யஜர்களையும்பற்றிப் பராசரர் சொல்கிறார் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன் அல்லது சூத்திரன் இவர்களில் யாராவது சண்டாளனுடைய பாத்திரத்திலி

ருக்கும் ஜலம், தயிர், பால் இவைகளே தோஷமென்று தெரிந்து கொள்ளாமல் அருந்தினர்களேயாகில் முதலான மூன்று ஜாதிகளும் பிர்மகூர்ச்சம் என்கிற பிராயச்சித்தத்தைச்செய்து உபவாஸமிருந்தால் சுத்தர்களாவார்கள். சூத்திரர்களாயிருப்பின் உபவாஸத்தாலும் சக்தியையனுஸரித்து தானஞ்செய்வதாலும் சுத்தர்களாகிறார்கள்" என்று பாராசரஸம்ஹிதையில் கூறியிருக்கிறார்.

பாராசர ஸ்மிருதியிலும்,

युगं युगद्वयंचैव त्रियुगं च चतुर्युगम् ।
चण्डालसूतिकोदक्या पतितानामधःक्रमात् ॥

சண்டாளன், பிரஸவித்தவள், வீட்டுக்காகாதவள், பதிதன் இவர்களுக்கு முறையே 4, 3, 2, 1-யுகம் விலகவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

१५ हारीतस्मृतिः ॥

चण्डालैस्सह संभाष्य द्विजसंभाषणाच्छुचिः ।
गायत्रीं व्याहरेद्वापि इति धर्मो व्यवस्थितः ॥

சண்டாளனுடன் பேசினால் பிராமணனுடன் மறுபடியும் ஸம்பாஷணம் செய்வதினால் சுத்தியாகிறான். அல்லது காயத்திரி மந்திரத்தையாவது ஜபிக்கவேண்டும் என்று தர்மத்தின் வியவஸ்தை. (ஹாரீதர்,)

१६ वृद्धहारीतस्मृतिः ॥

चण्डालः पतितोवापि यस्मिन्गेहे समाविशेत् ।
त्यक्त्वा मृण्मयभाण्डानि गोभिः संक्रामयेत् गृहम् ॥ 9-401.

சண்டாளனாகிலும், பதிதனாகிலும் ஓர் கிருஹத்தில் பிரவேசித்தால் அவ்வீட்டிலுள்ள மண்பாண்டங்களை விலக்கி எறிந்துவிட்டு மூன்று தினங்கள் பசுக்களைக்கட்டிய பிறகுதான் சுத்தமாகிறதென்று விருத்தஹாரீத ஸ்மிருதியில் 9-வது அத்தியாயம் 401 வது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

பின்னும்,

अमेध्यशवचण्डालमद्यमांसादिदूषितान् ।
कूपादुद्धृत्य कलशैस्सहस्रं रेचयेज्जलम् ॥

சவம், சண்டாளன், மத்தியம் முதலானவைகளின் ஸம்பந்தத்தால் கிணறுகளிலிருக்கும்ஜலம்தோஷமுள்ளதாகின்றது. அதைப் போக்க அக்கிணற்றிலிருந்தும் ஆயிரம் குடம் தண்ணீர் எடுத்து வெளியில் விடவேண்டும். அதற்குப் பிறகுதான் அது தோஷமற்றதாய் இதரர்களின் உபயோகத்திற்கருகமாகும் என்று இதே அத்தியாயத்தில் 405-வது சுலோகத்தாலும் அறிவிக்கிறார்.

17. ஆபஸ்தம்பர்.

चण्डालस्पर्शने संभाषणायां दर्शने च दोषः । तत्र प्रायश्चित्तमवगाहनमपामुपस्पर्शने संभाषणायां ब्राह्मणसंभाषा दर्शने ज्योतिषां दर्शनम् ॥

"சண்டாளனைத் தொட்டாலும், அவனுடன் பேசினாலும், அவனைப் பார்த்தாலும் தோஷமுண்டு. இவைகளுக்குப் பிராயச்சித்தம்.—தொட்டால் ஜலத்தில் மூழ்கி ஸ்நானம், பேசினல் பிராமணனுடன் ஸம்பாஷணம், பார்த்தால் ஜ்யோதிஸ்களைப் பார்த்தல்" (ஆபஸ்தம்பர்;)

चण्डालघातवापीष्वज्ञानाद्यः पिबेज्जलम् ।
उपोष्य रजनीमेकां पञ्चगव्येन शुध्यति ॥
चण्डालभाण्डतोयं तु द्विजः पीत्वा विमोहितः ।
कृच्छ्रत्रयं प्रकुर्वाणस्ततः पापात्प्रमुच्यते ।
चण्डालेन तु संस्पृष्टा अपो यः पिबति द्विजः ।
कृच्छ्रपादेन शुध्येत्तु पुनः संस्कारमर्हति ॥

"சண்டாளர்களால் வெட்டப்பட்ட கிணறுகளிலிருந்து தெரியாமல் ஜலம் குடித்தால் ஒரு ராத்திரி உபவாஸமிருந்து பஞ்சகவ்யப் பிராசனம் செய்தால் சுத்தியாகிறான். சண்டாளர்களுடைய பாத்திரத்திலுள்ள ஜலத்தை மோஹத்தினல் பிராமணன் குடித்தால்

மூன்று கிருச்சிரம் அனுஷ்டித்து பாபத்திலிருந்து விடுதலையடைகிறான். சண்டாளனால் தொடப்பட்ட ஜலத்தைக் குடிக்கும் பிராமணன் கால் கிருச்சிரத்தினால் சுத்தியாகிறான். ஆனாலும் மறுபடியும் ஸம்ஸ்காரம் செய்துகொள்ளவேண்டும்" (ஆபஸ்தம்பர்,)

अन्त्यजैः खानिता कूपास्तटाका वाप्य एव च ।

एषु स्नात्वा च पीत्वा च प्राजापत्येन शुध्यति ॥

"அந்தியஜர்களால் வெட்டப்பட்ட கிணறுகள், குளங்கள், வாபீகள் இவைகளில் ஸ்நானம் செய்தாலும் ஜலம் குடித்தாலும் பிராஜாபத்யத்தினால் சுத்தியடைகிறான்." (ஆபஸ்தம்பர்,)

रजस्वलान्त्यजैस्स्पृष्टा शुना च श्वपचेन च ।

त्रिरात्रोपोषिता भूत्वा पञ्चगव्येन शुध्यति ॥ अ-७-७.

வீட்டுக்குத் தீண்டாதவளான ஸ்திரீக்கு, சண்டாளன், நாய், ச்வபசன் இவர்களுடைய ஸ்பர்சம் ஏற்படுமாகில், மூன்று தினங்கள் உபவாஸமிருந்து முடிவில் பஞ்சகவ்யப் பிராசனத்தால் சுத்தியடைகிறாள் என்று ஆபஸ்தம்பர் அறிவிக்கிறார். தீண்டாதவளுக்கு இவர்களுடைய ஸ்பர்சத்தாலேற்படும் தோஷத்திற்கு இவ்விதம் விதித்தால் நம்போன்ற சுத்தர்களுக்குத்தீண்டாதவர்கள் ஸ்பர்சம் ஏற்பட்டால் அதனால் உண்டாகும் தோஷத்தின் வலிமையை நாமே அறிந்துகொள்ளலாம்.

१८ सुमन्तुः ॥

चण्डालदर्शने सूर्यदर्शनं संभाषणे ब्राह्मणादिव्यवहारः संस्पर्शने सचेलं स्नानमाचरेत् ॥

சண்டாளனைப் பார்த்தால் சூரியதரிசனம், பேசினால் பிராமணருடன் ஸம்பாஷணம், தொட்டால் வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்யவேண்டும். (ஸுமந்து)

அஸ்பிருசிய ஜாதியார்களால் தொடப்பட்ட அன்னம் புஜிக்க யோக்கியதையில்லை யென்று மேற்கண்ட வசனங்களிலிருந்தே ஊஹிக்கக்கூடியதால் அவ்விஷயமான வசனங்களை இவ்விடம் உதாஹரிக்கவில்லை. அவர்களால் பார்க்கப்பட்டதே தூஷிதமானால் தொடப்பட்டதைப்பற்றிக் கேட்பானேன்?

श्वचण्डालपतितावेक्षणे दुष्टम् ।

"நாய், சண்டாளன், பதிதன் இவர்களால் பார்க்கப்பட்ட (அன்னம்) துஷ்டம்" என்று கௌதமர் விதிக்கிறார்.

१९ शातातपः ॥

चण्डालोदकभाण्डेषु यः पिबेत्तृषितो जलम् ।
तत्क्षणात्क्षिपते तच्चेत् प्राजापत्येन शुध्यति ।
यदि न क्षिपते तोयं चिरेणैवास्य जीर्यते ।
प्राजापत्यं न कर्तव्यं कृच्छ्रं सांतपनं चरेत् ॥

"சண்டாளனுடைய ஜலபாத்திரத்திலிருந்து தாஹத்தினால் ஜலம் அருந்தினால், உடனே துப்பிவிட்டால் பிராஜாபத்யத்தினால் சுத்தியாகிறான். துப்பாமல் காலதாமதத்தினால் ஜலம் ஜரித்துவிடுமானால் பிராஜாபத்யம் செய்யக்கூடாது. கிருச்சிர ஸாந்தபனமே செய்யவேண்டும்." (சாதாதபர், அப்படியே யமரும்,)

२० व्यासः ॥

चण्डालभाण्डसंस्पृष्टं पिबेत्तोयमकामतः ।
अहोरात्रोषितःस्नात्वा पञ्चगव्येन शुध्यति ॥
ततःस्नात्वा तथा कुर्यात् कामात्सान्तपनं चरेत् ।
तेषां तटाके कूपे च तथैवोक्ता मनीषिभिः ॥

"சண்டாளனுடைய பாத்திரத்தால் தொடப்பட்ட ஜலத்தைத் தெரியாமல் குடித்துவிட்டால் ஒரு இரவும் பகலும் உபவாஸம் இருந்து பஞ்சகவ்யப்பிராசனம் செய்தால் சுத்தியாகிறான். அதில் ஸ்நானம் செய்தாலும் அப்படியே செய்யவும், தெரிந்துசெய்தால் ஸாந்தபனம் அனுஷ்டிக்கவேண்டும். அவர்களுடைய குளமாயிருந்தாலும், கிணறாயிருந்தாலும் இதே விதிதான் என்று தெரிந்தவர்கள் சொல்கிறார்கள்." (வியாஸர்)

२१ वेदव्यासस्मृतिः ॥

बराटो मेदचण्डालौ दाशः श्वपचकोलिकाः ।
एतेऽन्त्यजास्समाख्याता येचान्ये च गवाशनाः ।
एषां संभाषणे स्नानं दर्शनादर्कवीक्षणम् ॥ 13

"வராடன், மேதன், சண்டாளன் முதலானவர்களும் மற்றும் கோவைப் புசிப்பவர்களும் அந்தியஜன் என்று பிரசித்தமாய்க் கூறப்படுகின்றார்கள். இவர்களுடன் வியவகாரம் செய்தால் ஸ்நானம் செய்யவேண்டும். இவர்களைப் பார்த்தால் உடனே சூரியனைத் தரிசிக்கவேண்டுமென்று வேதவியாஸ ஸ்மிருதியில் முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது."

கேள்வி.

२२ यमस्मृतिः ॥

यो भुञ्जानोऽशुचिर्वापि चण्डालं पतितं स्पृशेत् ।
क्रोधादज्ञानतो वापि तस्य वक्ष्यामि निष्कृतिम् ॥

எந்தப் பிராமணன் போஜனகாலத்திலும், அசுத்தமாயிருக்கும் காலத்திலும் கோபத்தினாலோ அறிவின்மையாலோ சண்டாளனையும் பதிதனையும் தொடுகின்றானோ அவனுக்குப் பரிகாரம் என்ன?

ஸமாதானம்.

षड्रात्रं वा त्रिरात्रं वा यथासंख्यं समाचरेत् ।
स्नात्वा त्रिषवणं विप्रः पञ्चगव्येन शुध्यति ॥ 3

அவன் செய்த பாபத்திற்குசிதமாய் ஆறு அல்லது மூன்று தினங்களில் ஒவ்வொருநாளும் மூன்று காலம் ஸ்நானம்செய்து முடிவில் பஞ்சகவ்யத்தால் சுத்தியடைகிறான் என்று யமஸ்மிருதி விதிக்கின்றது.

२३ लघ्वाश्वलायनस्मृतिः ॥

उदक्यां सूतिकांचैव पतितं शवमन्त्यजम् ।
श्वकाकरासभान्स्पृष्ट्वा सवासा जलमाविशेत् 21-13.

வீட்டுக்காகாதவள், பிரஸவித்தவள், பதிதன், சவம், சண்டாளன், நாய், காகம், கழுதை, இவைகளைத்தொட்டால் தரித்திருக்கும் வஸ்திரத்தோடு ஸ்நானம் செய்யவேண்டும். என்று லகு ஆச்வலாயன மஹரிஷி கூறுகின்றார்.

२४ वसिष्ठस्मृतिः ॥

चण्डालपतितोपस्पर्शने सचेलस्नातः सद्यः पूतो भवतीति विज्ञायते ॥ अध्या 23 सूत्र 28

சண்டாளன்பதிதன்இவர்களுடையஸ்பர்சமேற்பட்டால்உடனே வஸ்திரத்தோடு ஸ்நானம் செய்தால் சுத்தனாகிறான் என்று வஸிஷ்டர் அபிப்பிராயப்படுகின்றார்.

25. அத்திரிஸம்ஹிதை.

चण्डालेन तु संस्पृष्टं यत्तोयं पिबति द्विजः ।
कृच्छ्रपादेन शुध्येत आपस्तम्बोऽब्रवीन्मुनिः ॥

சண்டாளன் சம்பந்தப்பட்ட ஜலத்தை பிராமணன் சாப்பிட்டால் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்று ஆபஸ்தம்பர் கூறுவதாக அத்திரி மஹரிஷி சொல்லுகின்றார்.

வினு.

ब्राह्मणो वृक्षमारूढश्चण्डालो मूलसंस्पृशः ।
फलान्यत्ति स्थितस्तत्र प्रायश्चित्तं कथं भवेत् ॥

ஓர் விருக்ஷத்தின்மேல் பிராமணன் இருந்துகொண்டு பலங்களைப் புசிக்கின்றான். அம்மரத்தின் அடியில் சண்டாளனுமிருந்து கொண்டு பழத்தைச் சாப்பிடுகிறான். இந்தப் பிராமணனுக்குப் பிராயச்சித்தம் எப்படி?

விடை.

ब्राह्मणान्समनुज्ञाप्य सवासा स्नानमाचरेत् ।
अहोरात्रोषितो भूत्वा पञ्चगव्येन शुध्यति ॥ अत्रिः ।

பிராமணர்களிடம் சென்று அனுக்ஞைபெற்று தரித்திருக்கும் வஸ்திரங்களோடு ஸ்நானம்செய்து ஓர் இரவும் பகலும் உபவாஸ

மிருந்து பஞ்சகவ்யப் பிராசனம் செய்தால் சுத்தனாய்விடுகிறான். அன்றியும்,

एकाक्षरप्रदातारं यो गुरुं नाभिमन्यते ।
शुनां योनिशतं गत्वा चण्डालेष्वपि जायते ॥

ஒரு எழுத்தை ஒருவரிடமிருந்து நாம் கிரஹித்தாலும், அவரைக் குருவாகப்பாவித்து மரியாதை செய்யவேண்டும். அவ்விதம் எவன்மரியாதை செய்யவில்லையோ அவன் அக்கொடிய பாபத்தைப் போக்கவேண்டி நூறுஜன்மம் நாயாகவும், பிறகுசண்டாள யோனியில் பல ஜன்மாக்களையும், அடைகின்றான் என்றும், அதிக பாபத்தைச்செய்தவர்கள் சண்டாளஜாதியிற்பிறந்து அதன் பயனை யனுபவிக்கிறார்களென்றும் அத்திரி ஸம்ஹிதையிலேயே வரையப்பட்டிருக்கின்றது.

இத்தீண்டாமை விஷயத்தில் இவைபோன்ற இன்னும் பல ஸ்மிருதி வசனங்கள் கிடைக்கக்கூடியதாயிருந்தாலும் விரிவிற்கு அஞ்சி விடுத்தனம்.

இதுவரையில் கூறப்பட்ட ஒவ்வொரு ஸ்மிருதியிலும் தீண்டாமை விஷயத்தைப்பற்றி அது அவசியம் இருக்கவேண்டுமென்றும், அதையொழித்தால் பலஅநர்த்தங்கள் நேரிடுமென்றும் ஸ்பஷ்டமாய் விதிக்கப்பட்டிருக்கிறதென்பதை இதை நன்றாய் கவனித்துப் பார்ப்போர்களுக்கு நாம் கூறவேண்டியது அனாவசியம்.

இவ்விதம் அனேக ஸ்மிருதிகள் ஏகாபிப்பிராயமாய்த் தீண்டாமை அவசியம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துங்கால் அதை விலக்கவேண்டுமென்று சிலரால் செய்யப்படும் முயற்சியைக்கொண்டு அதை எப்படி விலக்கமுடியும்?

இனி மூன்றாவதுப் பிரமாணமான இதிஹாஸ புராணங்களின் அபிப்பிராயங்களும் இவ்விஷயத்தில் எப்படி இருக்கின்றன என்பதைக் கவனிப்போம்.

1. ஸ்ரீமத் ராமாயணத்தில் பாலகாண்டத்தில் கதிரவன் குலத்தில் தோன்றிய திரிசங்குவெனப் பெயர்வாய்ந்த ஓர் வேந்தன் தன் சரீரத்துடன் தேவபாவத்தை யடையவேண்டி குலகுரு

வான வஸிஷ்டரை அனேக வந்தனங்களுடன் பலவாறாய் வேண்டியும் அவர் உடன்படவில்லை. உடனே அவரது புதல்வர்களிடம் சென்று மிகுந்த பக்திசிரத்தையுடன் வஸிஷ்டரால் மறுக்கப்பட்டதையும் அறிவித்து தாங்கள் என்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொடுக்க வேண்டுமென்று அவ்வேந்தன் கேட்குங்கால் வஸிஷ்ட புத்திரர்களால் சபிக்கபபட்டவுடன் சண்டாளனாய் மாறினானென்பது எல்லோருமறிந்த விஷயம். அந்த ஸந்தர்ப்பத்தைப் பால காண்டம் 58-வது ஸர்க்கத்தில் வர்ணிக்கும் காலத்தில் வால்மீகி மகரிஷி சொல்கின்றதாவது:—

अथ रात्र्यां व्यतीतायां राजा चण्डालतां गतः ।
नीलवस्त्रधरो नीलः पुरुषो ध्वस्तमूर्धजः ॥
चित्यमाल्यानुलेपश्चायसाभरणोऽभवत् ।
तं दृष्ट्वा मन्त्रिणस्सर्वे त्यक्त्वा चण्डालरूपिणम् ।
प्राद्रवत्सहिता राम पौरा येऽस्यानुगामिनः ॥

"பிறகு ராத்திரி கழிந்தவுடன் சண்டாளத்தன்மையை அடைந்த ராஜாவானவர் கருப்பு வஸ்திரம் தரித்தவராகவும், கருப்பாகவும், பயங்கரமாகவும், தலைவிரித்தவராகவும், சிதையிலுள்ள மாலைகளாலும், சந்தனாதிகளாலும் அலங்கரிக்கப்பட்டவராகவும், இரும்பு ஆபரணம் தரித்தவராகவும் ஆய்விட்டார். சண்டாள ரூபத்தை அடைந்த அவரைப் பார்த்தவுடன் எல்லா மந்திரிகளும் அவரை விட்டு விலகினார்கள். அவர் கூடவிருந்த புரவாஸிகளும் வேகமாய் ஓடிவிட்டார்கள்" இந்த அபிப்பிராயத்தையே தேவீபாகவதம் முதல் ஸ்கந்தத்திலும் விஸ்தாரமாய் வரையப்பட்டிருக்கின்றது.

மஹா பாரதம் அனுசாஸன பர்வாவில் 77-வது அத்தியாயத்தில்,

शूद्रश्चण्डालमत्युग्रं वध्यघ्नं बाह्यवासिनम् ।
ब्राह्मण्यां जनयति ॥

பீஷ்மாசாரியாரிடம் தர்மபுத்திரர் ஸங்கரஜாதி எப்படி ஏற்படுகின்றது என்று வினவுங்கால் அவர் கூறுகிறதாவது, சூத்திரனால் பிரா

மண ஸ்திரீயினிடத்தில் உண்டுபண்ணப்படுகிறவன் சண்டாளன். அவன் குரூர ஸ்வபாவமுள்ளவன். அரசர்களால் கொலை செய்ய வேண்டுமென்று உத்திரவிடப்பட்ட குற்றவாளிகளை வதம் செய்ய வேண்டும். கிராம நகரங்களுக்கு வெளியில் அவன் வஸிக்கவேண்டும் என்பதே.

ஷை பர்வாவில் 152-வது அத்தியாயத்தில்,

पातकानां परं ह्येतद् ब्रह्मस्वहरणं बलात् ।
सान्वयास्ते विनश्यन्ति चण्डाळाः प्रेत्यचेह च ॥

"பிராமணன் பொருளை பலாத்காரமாய் அபஹரிப்பதானது சிறந்த பாதகமாகும். இந்த மஹா பாதகத்தை எவர்கள் செய்கிறார்களோ அவர்கள் குடும்பத்துடன் இருக்கும்பொழுதும், மறு பிறவியிலும் சண்டாளர்களாகிறார்கள்" என்றுபீஷ்மாசாரியாரே கூறுகின்றார்.

சாந்தி பர்வாவில்.

नेदं सम्यग्व्यवसितं महर्षे कर्म गर्हितम् ।
चण्डाळस्वस्य हरणमभक्ष्यस्य विशेषतः ।
साध्वन्यमनुपश्यत्वं-इति-महाभारते-शान्तिपर्वणि-अ· 141.

ஓர் மஹரிஷியானவர் லோகத்தில் அதிக க்ஷாமமேற்பட்டு சகலப் பிராணிகளும் ஆகாரத்திற்கு மிகவும் வருந்துங்கால், இவருக்கும் பசியின் கொடுமையால் அதிக சிரமமேற்பட்டு தனக்கு உற்ற நியமப்படி இருக்கமுடியாமல் எவ்விதமாகிலும் எதையாகிலும் புசித்துப் பிராணனைத் தரிக்கவேண்டுமெனக்கருதி ஒரு புலயன் பக்குவம் செய்துவைத்திருந்த மாமிஸத்தை அருந்தச் சென்றார். இவர் வருவதைக் கண்ணுற்ற அப்புலயன் இவரைநோக்கிக் கூறுகின்றதாவது—'ஹே மஹர்ஷே! தாங்கள் செய்யவேண்டும் என்றுதீர்மானித்திருக்கும் இந்தக்கர்மாவானது மிகவும்நிந்தியம், உங்களுக்கு இது உசிதமல்ல. நான் சண்டாளன், என்போன்றவர்களுடைய சம்பந்தமே தங்களுக்குக் கூடாது. அதிலும் சாப்பிடுவதற்கு அருகமில்லாத மாம்ஸம். ஆகையால் என்னுடைய சொத்

தான இந்த மாம்ஸத்தைத் தாங்கள் இச்சிப்பது உசிதமில்லே. தங்களுக்குசிதமான சிறந்த தோஷமற்ற ஆகாரத்தைப்பாரும் என்று புலயன் கூறியதாக பாரதம் சாந்தி பர்வாவில் 141-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் चतुर्णामेव वर्णानामागमः पुरुषर्षभ ।
अतोऽन्येत्वतिरिक्ता ये ते वै सङ्करजाः स्मृताः ॥
अयोगाः कारणा व्रात्याश्चण्डालाश्च नराधिपाः ।
एते चतुर्भ्यो वर्णेभ्यो जायन्ते वै परस्परात् ॥ शा-अ-302.

இதிலுல் சுத்தமான ஜாதி நான்குதானென்றும் மற்ற ஜாதிகளெல்லாம் ஸங்கரஜாதிகளென்றும், அவைகளுக்குள் சண்டாள ஜாதி என்பது மனிதர்களுக்குள் மிகவும் கீழ்ப்பட்டதென்றும் ஷெ சாந்தி பர்வாவில் நன்கு விளக்கிக்காட்டியிருக்கிருர்.

பெரியபுராணம்.

திருநாளைப்போவார் நாயனுர் சரித்திரம்.

இவர்ஜாதியில் புலயர் என்பது பிரஸித்தம், இவருக்கு நந்தனுர் என்றுதான் உலகில் பிரஸித்தி. தீண்டாதஜாதியில் ஜனித்திருந்த இவரைப்பற்றிப் பெரிய புராணத்தில் எவ்விதம் கூறப்பட்டிருக்கிறதென்பதையும் கொஞ்சம் கவனிப்போம் பெரிய புராணமென்கிற திருத்தொண்டர் புராணத்தில் 37 பாட்டுக்களால் விஸ்தாரமாயிருக்கும் நந்தனுருடைய சரித்திரத்தை ஆறுமுக நாவலர் சுருக்கமாய் வசனநடையில் எழுதியிருக்கிருர். அதில்''பலசிவஸ்தலங்களுக்கும்போய் வணங்கித்திருப்பணி செய்தலே தொழிலாகக்கொண்ட இந்நாயனுருக்குச் சிதம்பரதரிசனத்திலே வேட்கை மிக்குற்றது. இவ்வேட்கையின் மிகுதி, அது விளைந்த அன்றிரவு இவருககு நித்திரையின்மையாலும்; மற்றநாள் இவர் தாம் தில்லைக்குச் செல்லின் கோயிலினுள்ளேபுகுதல் தமது சாதிக்கு இயையாது என்பதை நினைந்து, போகாதொழிந்தாராயினும், அவ்வாசைகுன்ருது மேன்மேலும் வளர்தல்பற்றி நாளைப் போவேன் நாளைப்போவேன் என்று பலநாட்கழித்து ஆசையை

அடக்கல் கூடாமையால் பின் தில்லையின்எல்லையை அடைந்தமை யானும்; தெளியப்படும் இவ்வாறு மிக்க ஆசையுடன் சென்றும் தில்லையினுள்ளே வேதவிதிப்படி ஓமம்செய்யப் படுதலைக்கண்டு உட்புகாதொழிந்து, இரவு பகல் திருவெல்லையை வலஞ்செய்து வணங்கினமையால் வேதாகம விதிக்கு அஞ்சி, சாதிநெறி கடவாதுநின்ற இவரது பெருந்தன்மை துணியப்படும். என்று விளக்கிக்காட்டியிருக்கிறார். இங்கு மஹாஞன நந்தனர் கோயிலுக்குள்ளேபுகுதல் தம் ஜாதிக்கிசையாது என்றுசொல்லியிருப்பதையும் இரவு பகல் அத்திருவெல்லையைமாத்திரம் வலஞ்செய்து வணங்கினர். என்று கூறியிருப்பதையும் நன்கு கவனிக்கவேண்டும். இக்காலத்திய தீண்டாதவர்களுக்கும் அவர்களை முன்னுக்குக்கொண்டுவர வேண்டுமென்று முயற்சிப்பவர்களுக்கும் ஆலயத்திற்குள் செல்லாமலிருப்பது குறை என்று தோன்றுகிறது. நந்தனருக்கு ஆலயம் சென்ருல் அதிகபாபம் ஸம்பவிக்கும் தம்ஜாதி அதற்கு அருகமில்லை என்றுதோன்றி விலகிவிட்டார். இவ்விதம் அந்த ஜாதியிலுதித்தமஹானுல் அனுஷ்டித்துக் காட்டியும் அதை அற்பமேனும் கவனியாது ஹிதத்தைக்கூறும் பிறரையும் தூஷித்துப்பாபகர்மாவையே செய்யமுயன்ருல்கலியின் கொடுமையைத் தவிர வேறுயாது கூறமுடியும்.

மேலே உதாஹரிக்கப்பட்ட வாக்யங்களையும் அவைபோல் சாஸ்திரங்களில் காணப்படும் கோடிக்கணக்கான வாக்யங்களையும் பார்வையிட்டவன் எவனுக்கும் இத்தீண்டாமை தற்காலத்திய பிராம்மணர்களுடைய அஹம்பாவத்தினுல் ஏற்படுத்தப்பட்ட புதிய கோட்பாடு என்று சொல்ல தைரியம்வராது, கீழ் ஜாதியார்களிடத்தில் மேல்ஜாதியார் அஹம்பாவத்தை காட்டக்கூடாதென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். இத்தீண்டாமை விதிகள் அஹம்பாவத்தினுல் ஏற்பட்டவையென்று சொல்லக்கொஞ்சமேனும் காரணம் கிடையாது. மனு பாராசர் முதலிய மஹரிஷிகளுக்கும் அஹம்பாவம் ஆரோபிக்கும்படியான காலம் வந்திருக்கிறது. அவர்களுடைய திவ்ய ஞானத்தையும் நிஷ்பக்ஷபாதத் தன்மையையும் ஒப்புக் கொள்ளாதவர் ஹிந்துவென்று தன்னை சொல்லிக்கொள்ளவே லாயக்கில்லாதவர். மேல் ஜாதியார்களு

டைய வைதிக தர்மானுஷ்டானத்தின் நன்மையைக் கருதியே மேல்கண்ட விதிகள் எற்பட்டவையே தவிர வேறு காரணமில்லை. அது தெரியாமலும் சாஸ்திரங்களைத்திரும்பிப்பாராமலும் தமக்குத் தோன்றியவாறு உத்கோஷம் செய்வதிலும் சாஸ்திர ஸித்தாந்தம் இப்படித்தானென்று மற்றவர்களை எமாற்றுவதிலும் சக்தி பொருந்தியவர்களாக தற்காலத்தில் பலர் முன்னுக்குவந்திருகிறுர்கள். கலியின்பிரபாவமே பிரபாவம்! இவ்வித நவீன சாஸ்திரக்கர்த்தாக்களிடமிருந்தும் நம் பாதகண்டத்தை ரக்ஷித்து எப்பொழுதும் போல் ஸநாதனதர்மத்தை நிலைநிறுத்தவேண்டும்என்று ஜகத்ரக்ஷகரான பகவானையே எல்லாரும் பிரார்த்திப்போமாக.

யுக்திவிசாரம்.

தீண்டாமையை விலக்குவதால் யாதுபயனை இவர்கள் விரும்புகின்றுர்களோ அப்பயனும் கிட்டாதென்பது திண்ணம். தீண்டாமையை விலக்கி அதனுல் எதிர்பார்க்கப்படும் பிரயோஜனங்களாவன:—(1)ஸ்வாராஜ்யஸித்தி, (2) தேசமுன்னேற்றம். (3)சகோதாஒற்றுமை, (4) கீழ் ஜாதிகளின் கஷ்டநிவர்த்தி என்பவைகளே முதலாவது பலமாய் எதிர்பார்க்கப்படும் ஸ்வாராஜ்யஸித்தி இதனுல் எற்படுமாவென்பதைப்பற்றி முந்திவிசாரித்து மற்றவைகளையும் முறையே பிறகு விசாரிப்போம்.

ஸ்வாராஜ்யஸித்தி:—“தற்காலம் நம் இந்தியாதேசம் பிறருடைய ஆளுகையிலிருப்பதால் அவர்கள் நம் தேசத்தின் நிலைமையையும், மனிதர்களுக்கு அவ்வக்காலத்தில் எற்படும் கஷ்டங்களையும் கவனிக்காமல் அவர்களிஷ்டம்போல் நடத்துவதால் நமக்குப் பலவிதமான கஷ்டங்கள் அடிக்கடி நேருகின்றன. நம் தேசத்தின் ஆளுகை நம்மிடமே இருக்குமாகில் இவ்விதகஷ்டங்கள் நேராமல் சுகமாயிருக்கலாம். இவ்விதம் நம்க்ஷேமத்திற்கு முக்கிய காரணமான இந்தியாவின் ஆளுகை நம்மிடம்வாராமல் பிறரிடமிருப்பதற்குக்காரணம் மிகவும் கொடுமையான இத்தீண்டாமையே. இதைஅடியோடு ஒழித்தால் ஸ்வாராஜ்யஸித்தி நமக்குக் கிடைத்துவிடும். நாம் சுகமாயிருக்கலாம்” என்று சிலர் கருதுகிறுர்கள். இவர்கள் “தமது வாக்கிற்கும் எதிர்வாக்கா” என்று

அகங்காரம் கொள்ளாமல் பொறுமையுடன் சற்றுகவனிக்கவேண்டும். நம் இந்தியா தேசமானது அன்னிய நாட்டாரின் ஆளுகைக்குட்பட்டு சுமார் 300 வருஷத்திற்குமேலில்லை என்று நிச்சயமாய்த் தெரிகிறது இதற்குமுன் நம் தேசத்திலுள்ள அரசர்களே ஆண்டு வந்தார்களென்று பலரும் நன்கறிந்தவிஷயமே. ஸ்வராஜ்யஸித்திக்கு இடையூறாய் ஏற்பட்டிருக்கும் இத்தீண்டாமையானது எக்காலம் தொடங்கி நம் தேசத்தில் வழங்கப்பட்டு வருகிறதென்பதைச் சற்றுக் கவனித்தால் மனு, யாவல்க்யர், பாராசரர், வசிஷ்டர் முதலான மகரிஷிகள் ஸ்மிருதிகளில் தீண்டாதவர்களையும் அவர்களுக்குற்ற தர்மங்களையும் நன்கு விளக்கிக் காட்டியிருப்பதால், ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன் இது ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. தற்காலத்திலுள்ளவர்கள் கருதுவதுபோல் இத்தீண்டாமையே ஸ்வராஜ்யஸித்திக்கு இடையூறாயிருப்பின் இது ஏற்பட்டகாலமுதல் அவ்விதமேயிருந்து தீரவேண்டும். உண்மையை கவனிக்குங்கால் நம்தேச மன்னர்களே பலர் இந்தியாவை ஆண்டிருப்பதால் அக்காலத்தில் இது இடையூறாகவிருந்ததாகத் தெரியவில்லை. பின்னும் அக்காலத்திய நம் தேசத்தரசர்கள் வர்ணாச்ரம தர்மங்களையும் ஜாதிப்பிரிவுகளையும் தவறாமல் சாஸ்திரப்படி நடத்தி வந்தார்களென்றும் அவ்விதம் நடத்திவந்ததினாலேயே அவர்கள் விசேஷமான க்ஷேமத்தை யடைந்தார்களென்றும் அந்தந்த அரசர்களின் சரித்திரத்தைக்கூறும் கிரந்தங்களால் தெரியவருகிறது. "சங்கானது கொஞ்சகாலத்திற்கு முன் நல்ல வெண்மையாயிருந்தது. இப்பொழுது மஞ்சளாயிருக்கிறது" என்று ஒருவன் சொன்னால் சொல்லுகிறவனுடைய நேத்திரத்திலுள்ள தோஷத்தால் அது அவனுக்கு மஞ்சளாகத்தோன்றுகிறதே யல்லாமல் அதற்கு இயற்கையான வெண்ணிறமானது எங்ஙனம் ஒருக்காலும் மாறாதோ அவ்விதம் தீண்டாமை முதலிய ஜாதி தர்ம வியவஸ்தைகளே நம் தேச க்ஷேமத்திற்கு முக்கிய காரணமென்று பலமகரிஷிகளால் கூறப்பட்டும் அனாதிகாலம் தொடங்கி உலகில் அனுஷ்டானத்திலும் நடைபெற்றுவரும் இத்தீண்டாமையை ஸ்வராஜ்யஸித்திக்கு இடையூறெனச் சிலர் கொள்ளும் அபிப்ராயமானது மிகவும்

தவறென்றுகூறவும்வேண்டுமோ, பின்னும் தீண்டாமையை ஒழித்தால் உடனே ஸ்வராஜ்யத்தை உங்களிடம் கொடுத்துவிடுகிறோமென்று எவர்கள் தீர்மானமாய்ச்சொல்லியிருக்கிறார்களோ தெரியவில்லை. நம் தேசத்தை ஆளும் அரசர்களுக்குள்ளும் ஜாதிபேதம் இருப்பதாகவே தெரிகிறது. அவர்களுக்குள்ளிருக்கும் ஜாதிவேற்றுமையானது இந்த ராஜ்யத்தை அடைவதற்கு ஏன் இடையூறாக ஆகவில்லையோ தெரியவில்லை. அந்தந்த ஜாதிக்குற்ற தர்மங்கள் ஆசாரங்கள், சாஸ்திரவிதிப்படி நன்கு நடைபெறாமல் மாறினால் அதுவே நம்தேசகஷ்டத்திற்கு முக்கிய காரணமாகும். இந்த அபிப்பிராயத்தை ஸ்ரீமத் ராமாயணத்தில் உத்தரகாண்டத்தில் ஓர் அந்தணன் சிறுவயதில் இறந்த தனது குமாரனை ஸ்ரீராமர் முன்னிலையில் கொண்டுவந்துபோட்டு உமது அதர்மத்தால் எனது குழந்தை இறந்தானெனவாய்விட்டலருங்கால் ஸ்ரீராகவன் அதர்மத்திற்குக் காரணத்தை விசாரிக்கும்பொழுது "ஓர் சூத்திரன் தனக்கு அர்ஹமில்லாத தவத்தைச் செய்கிறான் அந்த அதர்மத்தால் இவ்விதம் நேர்ந்தது" என்று விளம்பியதைச் செவியுற்று உடனே அத்தவத்தினின்றும் அவனை விலக்கி வேதியரின் புதல்வனை உயிருடன் எழுப்பி அனுப்பினார் என்று கூறப்பட்டிருப்பதால் தற்காலம் நம் தேசத்தில் நேர்ந்திருக்கும் வர்ணாச்ரமதர்மத்தின் மாறுபாட்டால் பலவித கஷ்டங்களை நாம் அனுபவிக்கிறோம். என்பதை நன்கு விளக்கிக்காட்டவில்லையா? இவ்விதம் அனுபவிக்கும் கஷ்டங்கள் நமக்குப் போதாதெனக் கருதி அற்பமாக நடைபெறும் தீண்டாமை முதலிய ஜாதி தர்மங்களை அடியோடகற்றி எப்பொழுதும் கொடிய கஷ்டநிற்குகுள்ளாக்க வேண்டுமென்கிற தீவ்ரமான எண்ணங்கொண்டு இத்தீண்டாமையையும் விலக்க வேண்டுமென்று சிலர் பெரும்பாடுபடுகிறார்கள். அது எப்படிப் பயன்படும்.

இரண்டாவதுதேசமுன்னேற்றம்:—தீண்டாமையை யொழிப்பதால் நம் தேசம் முன்னுக்கு வருமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்களால் கூறப்படும் முன்னேற்றம் என்ற சப்தத்திற்கு ஸ்வராஜ்யஸித்தி என்றே கருத்தாயிருந்தால் அதுஒருக்காலும் கிட்டாதென்று முன் நிரூபித்தாய்விட்டது. அவ்வித

யின்றி வேறு விதமாக நம்தேசத்திற்கு க்ஷேமமுண்டாகுமென்று அவர்களுடைய அபிப்பிராயமிருந்தால் அதுவும் இவ்விதமென்று ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கவில்லை. ஒரு ஸமயம் தற்காலத்தில் நம்மால் அனுபவிக்கப்பட்டுவரும் சில கஷ்டங்களுக்கு இத்தீண்டாமையே காரணம் அதையொழித்துவிட்டால் அதிக மழையாலும் பிரவாகங்களாலும், மழையில்லாமையாலும் கொடிய பல்வியாதிகளாலும் நம் தேசத்திற்கு ஏற்படும்கஷ்டம் விலகி ஸுகித்திருக்கலாம் என்று கருதுவார்களாகில் அதுவும் தவறே. இதனால்தான் அவ்வித கஷ்டங்கள் நம் தேசத்திற்கு ஏற்படுகின்றனவென்பதை எப்படிக்கண்டு பிடித்தார்களோ தெரியவில்லை. வர்ணாச்ரமதர்ம வியவஸ்தைமாறுவதால் தேசத்திற்குப் பெரியகஷ்டங்கள் நேரிடுமென்று சரகஸம்ஹிதையில் ஸ்ரீ பதஞ்சலி பகவானும், மற்றுமுள்ள ஸ்மிருதிக்கர்த்தாக்களான பல மகரிஷிகளும்ஸ்பஷ்டமாய் கூறியிருக்க அதற்கு நேர் விரோதமாய் முக்காலத்திலுள்ள ஸகல விஷயங்களையும் நன்கு அறியக்கூடிய தபோமகிமைபெற்ற மகரிஷிகளால்கூட கண்டுபிடிக்கப்படாத இந்த அபூர்வமான விஷயத்தை இவர்கள் எப்படியறிந்து வெளியிடுகிறார்களோ தெரியவில்லை. தேசமுன்னேற்றமென்கிற பெயரைமாத்திரம் சொல்லிக்கொண்டு தேசத்திற்குத் தற்காலமிருக்கும் கஷ்டங்களைக்காட்டிலும் இன்னும் அதிககஷ்டங்களை உண்டுபண்ணவேண்டி தீண்டாமையொழிப்பது என்கிறசாஸ்திரவிரோதமான இந்த அதர்மத்தை ஸ்தாபிக்கவேண்டி வீண்கூச்சலிடுகிறார்களே தவிர அற்பமேனும் இதினால் சுகம் ஏற்படுமென்று சொல்ல இடமில்லை.

மூன்றாவது சகோதர ஒற்றுமை:— அதாவது ஒருதகப்பனுக்குண்டான பல புத்திரர்களுக்குள் ஜாதியில் கீழ்மேல் என்றாவது தர்மானுஷ்டானங்களில் வேற்றுமையையாவது எப்படி அங்கீகரிக்கப்படவில்லையோ அவ்விதம் ஒரே ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்டு மனுஷ்ய ஜாதியையடைந்த ஸகோதரர்களான நமக்குள் கீழ்மேல் என்கிற வியவகாரத்தையும் சில கார்யங்களில் சிலருக்கு அதிகாரமில்லை என்று பக்ஷபாதமாய் விலக்குவதையும் விட்டுவிட்டு ஸ்னேகபாவத்தையடைந்து எல்லாக்கர்மாக்களையும்எல்லாரையும் அனுஷ்டிக்கும்படி செய்யவேண்டும். நம்மைப்போல்

கீழ்ஜாதிக்காரர்களும் நற்கர்மங்களையனுஷ்டித்து சிரேயஸ்ஸை யடைந்து விடுகிறதாவென்கிற அசூயையைவிட்டு சகல ஜனங்களும் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று உள்ளன்புடன் கருதி ஜாதிதுவேஷம் முதலியவைகளை அறவேயொழித்து ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்கிறதே ஸகோதர ஒற்றுமை என்றும், அதற்கு விரோதமாயிருக்கும் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்றும் சிலர்விரும்புவதாகஇருந்தால் இதுவும் சரியல்ல. நாமெல்லோரும் சினேகமாயிருக்க வேண்டுமென்பதில் ஆக்ஷேபமில்லை. இதையாரும் மறுக்கஇடமில்லை. அந்த ஸ்நேஹத்தை உபயோகப் படுத்த வேண்டியமுறை எவ்விதமென்பதை மாத்திரம் தெரிந்து கொள்ளாமல் கஷ்டப்படுகிருர்கள். श्रुतिस्मृती ममैवाज्ञा சுருதி, ஸ்மிருதி இவ்விரண்டுகளும் என்னுடையஆக்ஞாரூபங்கள் என்று பகவான் திருவாய் மலர்ந்தருளியிருப்பதால்பகவதாக்ஞைக்கு விரோதமின்றி நம்முடைய சினேகாபிமானத்தைக் காட்டவேண்டும். நம் தாயாயிருந்தாலும் பிரஸவித்தகாலம் வீட்டுக்காகாத ஸமயம் முதலிய பல ஸமயங்களில் தீண்டாதவர்களுக்குப்போல் விலக வேண்டுமென்றும் அவளுடன் சம்பாஷணை முதலான கார்யங்கள் கூடாதென்றும் கூறும் விதியையனுஸரித்தே இப்பொழுதும் நடைபெற்று வருகின்றது. அவ்விதம் நம்தாயை விலக்கி வைப்பதாலும் பேசாமலிருப்பதாலும் அவளிடத்தில் நமக்குப் பிரியமில்லை என்ருவது அவளை ஹிம்ஸிக்கிருேம் என்ருவது சொல்வது உசிதமா? ஜாதி, ஆச்ரமம் இவைகளின் பிரிவைக்காரணமாகக் கொண்டு வெவ்வேருகக் கூறப்பட்டிருக்கும் தர்மங்களை அந்தந்த ஜாதி ஆச்ரமத்திற்குற்ற தர்மத்தை அவரவர் மாத்திரம் அனுஷ்டித்து அதன் பலனைப்பெற வேண்டுமேயல்லாமல் ஒருவர் தர்மத்தை மற்ருெருவர் அனுஷ்டித்தால் பயனில்லாமல் போவதுமன்றி பாபத்திற்கும் உள்ளாகவேண்டும். இந்த அபிப்பிராயத்தை

स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ।

என்கிற சுலோகத்தால் ஸ்ரீ பகவானும் ஸ்பஷ்டமாயறிவித்திருக்கிருர். ஆகையால் தான் பிராமணஜாதியில் ஜனித்தும் ஸ்திரீகளுக்கு வேதசாஸ்திராத்தியயனம் கூடாதென்று சூத்திரர்களைப் போல் விலக்கப்பட்டிருக்கின்றது இதனல் பிராமணஜாதி ஸ்திரீ

களை ஹிம்ஸிப்பதாகக் கருதலாம்? அந்த ஸ்திரீகளிடம் புருஷர்களுக்கு ஸ்நேகமில்லை என்றாவது ஏற்படுமா?

ஒரே பிராமணஜாதியிலுள்ள பிர்மசாரி, கிருஹஸ்தன் முதலியவர்களுக்குள் பிர்மசாரிக்குப் பிக்ஷைவாங்கி ஆகாரம் செய்யும்படியும், கிருகஸ்தர்களுக்கு பிக்ஷை போடும்படியும் சொல்லும் சாஸ்திரப்பிரகாரம் நடப்பதை பிர்மசாரிகளிடம் பக்ஷபாதமென்றும், கிருகஸ்தர்களை அவர்களுக்குஅன்னமிடும்படி ஹிம்ஸிக்கிறார்களென்றும் கூறமுடியுமா? சிற்சில காரியங்களில் விலக்கு விதியாகச் சிலவற்றை சாஸ்திரப்பிரமாணங்களைக் கொண்டு அனுஷ்டிப்பதால் நமக்குள் சிநேகமில்லை என்று எங்ஙனம் சொல்ல முடியும். இன்னும் பாருங்கள்; நம் தேசத்திலுள்ள மிராசுதார்கள் அனைவரும் தம்தம் நிலங்களைத் தீண்டத்தகாதவர்களைக் கொண்டு தான்னியங்களையடைகிறார்கள். இதனால் இவ்விருவர்களுக்கும் ஒற்றுமையிருந்தே தீரவேண்டுமென்று ஏற்படவில்லையா? மேலும், தீண்டத்தகாதவரென்று கூறப்பட்ட குடிகளுக்கு மிராசுதார்கள் அவ்வக்காலங்களில் பசியில்லாமல் சுகமாய் சாப்பாடு முதலான கார்யங்கள் நன்கு நடைபெறவேண்டி தான்யமும்,பணமும், வஸ்திரமும் கொடுத்துதவி, அறுப்பு ஸமயங்களிலும் தம் வீட்டுக்குத் தான்யம் எடுப்பதற்கு முந்தி அந்தக்குடியானவனுக்குக் கொடுக்கவேண்டியதைக் களத்தில் கொடுக்கிறார்கள் என்பதும் பிரசித்தமே. பின்னும் இவர்களுக்குக் கல்யாணம் நேர்ந்த காலங்களிலும் வட்டியில்லாமல் ரூ. 100, 200, கொடுத்தும் மிராசுதார்கள் ஒத்தாசை செய்கிறார்கள். இவ்வித காரியங்களெல்லாம் தீண்டாதவர்களிடம் கருணையும் பிரியமும் இல்லாமல் துவேஷத்தாலா நடத்துகிறார்கள்! மிராசுதார்களுக்கும் குடியானவனுக்கும் ஒற்றுமையில்லாவிடில் ஸாகுபடி கார்யம் எங்ஙனம் நடைபெறும். தீண்டாதவர்களுக்கு ஷேக்ஹாண்ட் (Shake-hand) கொடுத்து அவர்களை நம் வீட்டுத்திண்ணையில் உட்காரவைத்தால் தான் அவர்களிடம் நமக்கு ஒற்றுமையிருக்கிறதென்றும் அவ்விதமில்லாவிடில் இல்லையென்றும் எப்படிச் சொல்லமுடியும்? வெவ்வேறு தேசத்திலிருந்துகொண்டு ஒருவரையொருவர் நேரில் பார்க்காமல் லெட்டர் மூலமாய்த் தெரிந்து

கொண்டு மிகவும் ஒற்றுமையாகப் பலபேர்களிருக்கிறார்களென் பதையறியாதார் ஒருவருமில்லை. மகாத்மா காந்தியவர்களை பரம ஸுகிருத்தாகக் கருதி அவரிடம் விசேஷஅபிமானத்துடன் அவர் எவ்விதம் சொன்னாலும் அவ்விதம் நடத்தவும் தயாராயிருக்கும் பல்லாயிரக்கணக்கான ஜனங்களும் அவரை நேரில் பார்த்துப் பேசி அவரிடம் ஷேக்ஹாண்ட் (Shake-hanb) பெற்று ஸுகி ருத்தானார்களா? இதுவிஷயமாய் இன்னும் விஸ்தாரமாய் நிரூபிக்க முடியுமானாலும் விரிவிற்கஞ்சி புத்திமான்களுக்கு இம்மட்டே போதுமென்று முடித்துவிடுகிறேன். தீண்டாமையினால் சகோ தர ஒற்றுமைக்கு யாதொரு பாதகமுமில்லை. ஒரே சகோதரர்க ளாயிருப்பவர்களும் ஒற்றுமையில்லாமல் விரோதிகளாயிருக்க லாம். தீண்டாதஜாதியாயிருந்தாலும் அவர்களும் மற்ற ஜாதிக ளும் ஒற்றுமையுடனிருக்கலாம். ஒற்றுமைக்குக் காரணம் மனப் பிரியமேயல்லாமல் வேறல்ல. இதுவிஷயமாய் ஜாதிநிர்ணயம் என்கிற கிரந்தத்திலும் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கின் றது. அதைப் பார்த்தும் தெரிந்துகொள்ளலாம்.

நான்காவது கீழ்ஜாதிகளின் கஷ்டநிவர்த்தி:—

" தீண்டாதவர்களை நாம் விலகும்படி சொல்வதாலும், கிரா மக்கிணறு, குளம், கோவில் முதலியவிடங்களில் அவர்களைப் பிர வேசிக்கக் கூடாதென்று தடுப்பதாலும் அதிகமான கஷ்டத்தை அவர்கள் அடைகிறார்கள். எல்லா ஜனங்களையும் கஷ்டமின்றி சுகமாயிருக்கும்படி செய்யவேண்டிய கடமை நமக்கிருக்க அதை விட்டு நாம் மாத்திரம் சுகமாயிருந்து பிறரைக்கஷ்டப்படுத்துவது நியாயமில்லை. ஆகையால் தீண்டாமை முதலிய சில கெட்ட வழக்கங்களை யொழித்து அவர்களையும் சுகமாயிருக்கும்படிசெய்ய வேண்டும் என்று இவ்விதம் சில கருணாநிதிகள் கருதுவதாகத் தெரிகின்றது. பொதுவாய் ஒரு பிராணி கஷ்டப்பட்டால் யாரா யிருந்தாலும் நம்மாலியன்றவரையில் அதை நிவர்த்தி செய்ய வேண்டிய கடமை நமக்கு உண்டு. இந்தக் கடமையைத் தீண் டத்தகாதவர்களிடமும் நாம் செலுத்த வேண்டியது முக்கியம். தீண்டத்தகாதவர்கள் விஷயமாய் ஏற்பட்டனவும் அனுஷ்டானத் தில் நடைபெற்று வருவதும், சில வைதிகர்களால் கூறப்படுவது

மான நிர்ப்பந்தங்கள் எப்பொழுது ஏற்பட்டன? யாரால் ஏற்படுத்தப்பட்டன? என்பதை முந்தி விசாரிக்கவேண்டும். தீண்டாதவர்களை ஹிம்ஸிக்கவேண்டுமென்று கங்கணம்கட்டிக்கொண்டிருக்கிறார்களென்று சில கருணாநிதிகளால் நிந்திக்கப்படும் தற்காலத்திலுள்ள வைதிகர்களால் இவை ஏற்படுத்தப்பட்டனவா? அல்லது பிறராலா? தற்கால வைதிகர்களாலேற்படுத்தப்படவில்லை என்பது யாவருமறிந்த விஷயமே. அன்றேல், இக்கொடிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியவர் யார்? சாஸ்திரங்களே. அவ்வித சாஸ்திரங்கள் எவை என்பதைத் துவக்கத்தில் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டிருப்பதால் இங்கு விவரிக்க வில்லை. சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட பகவானுடைய ஆக்ஞையை விலக்கவோ, சேர்க்கவோ நம் போன்றவர்களுக்கு அதிகாரமில்லை என்பது திண்ணம். தாயாயிருப்பினும் சாஸ்திரம் விலக்கவேண்டுமென்று கூறினால் விலக்கியே தீரவேண்டுமென்றும் அவ்விதமே நடைபெறுகிறதென்றும் முன் கூறியதை இச்சமயம் மறக்கக்கூடாது. தெய்வமாக பூஜிக்கக் கூடிய தாய் விஷயத்தில் கூட விதியை மாற்ற அதிகாரமில்லை என்றால் மற்றவர்கள் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? சாஸ்திரம் தான் ஏன் இவ்விதம் பக்ஷபாதமாகக் கூறுகிறதென்று கேட்பதும் உசிதமல்ல.

गुणकर्मविभागशः "அவர்களின் பாபபுண்ய கர்மாக்களுக்குத் தக்கவாறு ஜன்மாவையும் கர்மாவையும் அடைகிறார்கள். நான் பக்ஷபாதமாய் ஒருவரை மேலாகவும் மற்றொருவரைக் கீழாகவும் செய்யவில்லை" என்று ஸ்ரீ பகவானே ஸ்பஷ்டமாய்சொல்லியிருக்கிறார். சாஸ்திரங்களால் ஏற்படுத்தப்பட்ட விதியைக்கஷ்டமோ சுகமோ எவரும் முடிந்தவரையில் அநுஷ்டித்தே தீரவேண்டும். இவ்விதமிருக்க தீண்டத்தகாதவர்கள் விஷயத்தில் சாஸ்திரவிதியைத் தள்ள வேண்டுமென்றும் அதற்கு வைதிகர்கள் உடன்படவில்லை என்றும் கூச்சலிடுவது மிகவும் அறிவின்மையே. உண்மையை விசாரித்தால் தீண்டாதவர்களை அதிகக் கஷ்டப் படும்படி சாஸ்திரம் கூறவில்லை என்றே தோன்றுகிறது. அதையும் விசாரிப்போம். மார்க்கத்தில் தீண்டாதவர்களுக்கு விலகுவது சிரமமாயிருந்தால் மற்றவர்கள் விலகிப்போகிறார்கள். அவர்கள் தான்

விலகவேண்டும், நாம் விலகக் கூடாதென்கிற நியமமில்லை. அக்கிரஹாரத்திலோ மற்றுமுள்ள நியமத்துடன் கூடிய பிராமண வைசிய, சூத்திரர்களுடைய தெருவிலிருக்கும் கிணற்றில் தான் இவர்கள் ஜலம் எடுக்க வேண்டுமென்கிற நியமமில்லை. இவர்கள் வசிக்குமிடத்திலேயே என் கிணறுகளை வெட்டிக்கொள்ளக் கூடாது? அதற்கு அவர்களுக்குச் சக்தியில்லாவிட்டாலும் அவர்களுடைய கஷ்டங்களை விலக்க வேண்டிக் கங்கணம் பூண்டு, வெளிவந்திருப்பதாகப் பறையறையும் கருணைக் கடலான பிரபுக்கள் உண்மையில்ஜீவகாருண்யமுள்ளவர்களாயிருப்பின் சொற்பப் பொருளைச் செலவிட்டு என் அவர்களுக்குக் கிணறுகளை வெட்டிக் கொடுக்கக் கூடாது? அவ்விதம் செய்வதை வேண்டாமென்று எவர் தடுக்கிறாரோ தெரியவில்லை. இந்தப் பிரபுக்களின் கருணை தங்கள் பொருளுக்குச் செலவின்றித் தீண்டாதவர்களைப் பாபகர்மாவைச் செய்யும்படி ஏவவும் அதனால் மற்றவர்களுக்குஹிம்ஸையை யுண்டு பண்ணவும் மட்டும் தான் உபயோகப்படுமென்று தோன்றுகிறது. இக்கலியில் இந்தமாதிரி பரோபகாரத்தைப் பெரிதாய்க் கொண்ட கருணாமூர்த்திகள் தோன்றுவது மிகவுமெளிதே. கிராமங்களுக்கு வெளியிலிருக்கும் குளங்களில் தீண்டாதவர்கள் வரக்கூடாதென்று தடுப்பவர்யாருமிருப்பதாகத் தெரியவில்லை. அவர் வரமுடியாத கிராமமத்தியிலும், தேவாலயங்களுக்குள்ளும் இருக்கும் குளங்களில் அவர்கள் வருவது உசிதமில்லை என்று சொல்லலாம். சில தீர்த்தங்களில் பிராமண ஜாதியாயிருந்தாலும் விழுப்பாயிருப்பவன், வீட்டுக்காகாதவள், பிரஸவித்தவள், ஆசௌசமுள்ளவன் இவர்கள் ஸ்நானம் செய்யக்கூடாதென்று நியமமேற்பட்டு அவ்விதமே நடைபெற்று வருகின்றது. அதற்காக அவர்கள் வருத்தப்படுவது நியாயமா? அவ்விதமே தீண்டத்தகாதவர்களும் ஜாதியாலும், கர்மாவாலும் அசுத்தமுள்ளவர்களாகையால் புண்ணிய தீர்த்தங்களான சிலவற்றிற்கு அவர்களுடைய ஸம்பந்தம் கூடாதென்று சாஸ்திரப் பிரமாணங்களைக் கொண்டு விலக்கப்பட்டிருக்கின்றது. மற்ற நதிகளிலோ, வெளியிலுள்ள குளங்களிலோ அவர்களிஷ்டப்படி ஸ்நானம்செய்வதை யார் மறுப்பார். ஆகையால் இதனால் அவர்களுக்கு யாதொரு

கஷ்டமும் ஏற்பட நியாயமில்லை. "தேவாலயங்களில் நான்கு வர்ணத்தார்களும் தங்களிஷ்டப்படி உட்சென்று கடவுளைப் பிரார்த்தித்து தம் தம் பிறவிப் பிணியையகற்ற முயலுவதுபோல் தீண்டாதவர்களும் ஏன் முயற்சிக்கக் கூடாது? அவர்களைவரக் கூடாதென்று தடுத்துக் கஷ்டப்படுத்துகிறார்கள்" என்று சிலர் சொல்லுகிறார்கள். இதையும் விசாரிப்போம்.

இந்துக்களென்று பொதுவாய்க் கூறப்பட்டாலும் அவர்களுக்குள் பல ஜாதிபேதங்களும், ஆராதிக்கிற ஈசுவரமூர்த்திகளில் பல பேதங்களுமிருக்கின்றன. விஷ்ணு பக்தர்களான சிலர் சிவனைத் தரிசிப்பதில்லை. சிவபக்தர்களான சிலர் விஷ்ணுவையும் தரிசிப்பதில்லை ஈசுவரமூர்த்திகளில் அந்தந்த அதிகாரிக்குத் தக்கவாறு பலவாறான மூர்த்திபேதங்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விதம் கூறப்பட்டிருப்பதற்கு எந்தெந்த அதிகாரிகளுக்கு எவ்வித மூர்த்திகளில் அபிமானம் ஏற்படுகின்றதோ, எவனெவன் எதெதை உபாஸிக்க அதிகாரியோ அவனவன் அந்தந்த மூர்த்தியை ஆராதித்து இஷ்டத்தைப் பெறவேண்டுமென்பதே முக்கிய நோக்கமாகும். இக்கருத்தைக்கொண்டுதான் ஆதியிலவதரித்த ஸ்ரீ பரமாசார்யாளும் ஆறு மதங்களையும் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அதிகத் தாமஸகுணம் பொருந்திய ஜனங்களுக்குத் தாமஸகுணமுள்ள ஈசுவரமூர்த்தியை ஆராதிப்பதில் தான் பிரியமிருக்கும். அதற்குத்தான் அவர்களும் அதிகாரிகளாவார்கள். வேதமந்திரத்தால் பூஜிக்க அருகமில்லாதவர்கள் அதனால்தான் பூஜிப்பேன் என்று கூறுவதும் தவறாகும். வேதமந்திரங்களால் பூஜிக்க அதிகாரமுள்ளவர்கள் வேறுவிதமாய் பூஜிப்பதும் உசிதமில்லை. தீண்டாதவர்களுக்கு உபாஸிக்கக்கூடிய மூர்த்திகள் சிலவுண்டு. அவைகளை அவர்கள் ஜாதி வழக்கப்படி ஆராதித்தால் இஷ்டஸித்திபெறமாட்டார்கள் என்பதில்லை. எந்த மாதிரி தேவதாமூர்த்திகளை யார் உபாஸித்தாலும் உடனே பிரத்தியக்ஷத்தில் பயனைப்பெறுவதென்பது ஸாத்தியமில்லை.

ते पुनन्त्युरुकालेन என்று சான்றோர் சொல்லியபடி சாஸ்திரங்களைநம்பி நமக்கும்பகவான் அநுக்கிரகம்செய்வாரென்று உபாஸிக்கிறோம். இந்த சாஸ்திரமே தீண்டாதவர்களை உங்கள் வழக்கப்படி

குலதெய்வமான வீரன், கருப்பன் முதலான தெய்வங்களை நீங்கள் ஆராதித்தால் பகவான் அந்த ரூபமாயிருந்துகொண்டு அனுக்கிரகிப்பார் என்று கூறினால் அதை ஏன் அவர்கள் அங்கீகரித்து அவ்விதம் நடத்தி ஸித்திபெறக்கூடாது? எந்த ஆலயங்களில் அவர்களை வரக்கூடாதென்று சாஸ்திரம் தடுக்கின்றதோ அங்குதான் நாங்கள் வருவோமென்று செய்யும் பிடிவாதத்திற்கு யாது பயன் நேருமென்பதை நம் நண்பர்கள் ஏன் சற்று கவனிக்கக்கூடாது? பிரஸித்தமான சிவ, விஷ்ணு ஆலயங்களில் சென்று பகவானைத் தரிசிப்பவர்கள் சீக்கிரம் பலங்களைப் பெறுகிறார்கள் என்றாவது தீண்டாதவர்கள் உபாஸிக்கும் தெய்வங்கள் அவ்விதம் சீக்கிரம் பலத்தையளிக்கச் சக்தியற்றவை என்றாவது கூறமுடியுமா? பகவானுடைய அனுக்கிரகத்தைப் பெறுவதற்கு அவரவர்களுடைய சிரத்தையே முக்கிய காரணமாகுமேயல்லாமல் மூர்த்திபேதம் காரணமல்ல. இந்த அபிப்பிராயத்தையே,

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥

"எவனெவன் என்னை மண், சிலை லோஹம் முதலியவைகளால் எந்தெந்த மாதிரி சரீரமாக ஏற்படுத்தி முன் ஜன்மத்திலிருந்த வாசனையாலேற்பட்ட சிரத்தையுடன் கூடினவனாய் பக்தியுடன் பூஜிப்பதற்கு விரும்புகிறானோ அந்தந்த பக்தனுக்கு அவன் உபாஸிக்கும் மூர்த்தியிடம் திருடமான பக்தியை நான் உண்டுபண்ணுகிறேன்."

அதனால் யாது பயன்?

स तया श्रद्धया युक्तस्तस्याराधनमीहते ।
लभते च ततः कामान्मयैव विहितान्हितान् ॥ ७-२२.

"அதிகமான சிரத்தையுடன் கூடிய எவன் தன்னால் ஒரு மாதிரி கற்பிக்கப்பட்டிருக்கிற தேவதையை ஆராதிக்கிறானோ அவன் ஆராதிக்கும் மூர்த்தி ரூபமாயிருக்கும் என்னால் கொடுக்கப்பட்ட ஸகலமான இஷ்டங்களையும் அந்த தேவதா மூர்த்தியிடமிருந்து

அடைகிருன்" என்று கீதாசாஸ்திரத்தில் பகவானே நேரில்வெளியிட்டிருக்கிருர். இதனுல் எந்த இடத்தில்எந்தமாதிரி உருவமாகக் கற்பித்து யார் ஆராதித்தாலும், சிரத்தையுடன் ஆராதித்தால் அந்தந்தரூபமாயிருந்து அவரிஷ்டத்தைப் பகவான் கொடுக்கிருரென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவில்லையா? தீண்டாதவர்களும் அவர்களிருக்கு மிடத்திலேயே மாத்தடியிலோ, வெளிபூமியிலோ ஸௌகர்யமானவிடத்தில் கல்லையோ, கட்டையையோ வைத்துத் தங்களிஷ்டதேவதையாக அதைப்பாவித்து சிரத்தையுடன் ஆராதித்தால் நான் அனுக்கிரகம் செய்யமாட்டேனென்றும், இதரஜாதிகளுடன் சேர்ந்து தாங்கள்வருவதற்கு யோக்கியமில்லாத பெரிதான தேவாலயங்களில் வந்து தர்சித்தால் தான் அனுக்கிரகம் செய்வேனென்றும் எங்காகிலும் பகவான் சொல்லியிருக்கிருரா? அல்லது பெரிய ஆலயங்களில் வந்துதரிசிப்பவர்களுக்கு அதிக பலம் கிடைக்கிறதென்றும் மாத்தடியில் வைத்து ஆராதிப்பவர்களுக்குப் பலம் அற்பமாகத்தான் ஏற்படுமென்றும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றதா? அனுபவத்திலாகிலும் தெரிகின்றதா? எந்த இடத்தில் எந்தமாதிரி ஆராதித்தாலும் பக்தி சிரத்தையுடன் ஆராதிக்கும் பக்ஷத்தில் அவர்களிஷ்டத்தை நான் அளிக்க சித்தமாயிருக்கிறேனென்று பகவான் கீதா சாஸ்திரத்தில் வாய்விட்டுக் கதரியிருப்பதைச் சற்றும் கவனியாமல் எதற்காக வீண்வாதம் செய்ய முன்வரவேண்டும். தாமாக ஒன்றை மனதில் நினைத்துக்கொண்டு உலகத்தையும் கெடுத்துத் தாமும் கெட்டுப்போகவேண்டி தீண்டாதவர்களை ஆலயத்தில்வரக்கூடாதென்று சிலர் தடுப்பது பெரிய தப்பென்றும் எங்ஙனம் கூச்சலிடத்துணிகிருர்களோ? இந்த ஜாதியிற் பிறந்த நந்தனுர் எந்த ஆலயத்தில் உட்புகுந்து தர்சனம் பண்ணி முக்தி பெற்ருரோ தெரியவில்லை. அவரைப் பலர் ஆலயத்திற்கு வரும்படிகேட்டுக்கொண்டும் தாம்வருகிறதற்கு அருகால்லவென்றும்வரமாட்டேனென்றும் சொல்லிவிட்டுவெளிவீதிகளிலிருந்துநடராஜாவைத்தரிசித்ததாகப் பெரியபுராணத்தில் சொல்லப் பட்டிருக்கின்றதே. தற்காலத்திலுள்ளவர்கள் அவரைக்காட்டிலும் எந்த விஷயத்தில் மேம்பட்டவர்களென்றும் ஆலயப்பிரவேசத்தில் அவருக்கில்லாத அதிகாரம்

இவர்களுக்கெப்படி—ஏற்பட்ட தென்பதையும் பொறுமையுடன் சற்று கவனித்திருந்தால் பிறர்பேரில் இவ்விதம்வீணான அபவா தத்தைச் சுமத்த முன்வர நியாயமில்லை, மேலும், தீண்டாதவர் களைப் பிராமணர்கள் ஹிம்ஸிக்கிறார்களென்று அநாவசியமாய்ச் சிலர் பிராமண நிந்தை செய்கிறார்களே யல்லாமல் அவர்கள் அவ் விதநோக்கமுள்ளவர்களாகத் தெரியவில்லை. ரதோத்ஸவ காலங் களில் தீண்டாதவர்களுடன் பிராமணர்களும் சேர்ந்து நின்று கொண்டு தேர்வடத்தை இழுக்கவில்லையா? மாயவரம் திருவிடை மருதூர், கும்பகோணம் முதலியஸ்தலங்களில் ஸ்வாமி தீர்த்தம் கொடுக்கிற சமயங்களில் எல்லோரும் சேர்ந்து ஸ்நானம் செய்ய வில்லையா! சிறந்த பண்டிதர்களான பாகவதரனைவரும் பிரா மணர்களால் நிறைந்த பெரிய ஸபையில் நந்தனார் சரித்திரத்தை மிகவும் பக்தியாய் பிரஸங்கம் செய்யவில்லையா? அம்மஹானு டைய சரித்திரத்தைச்செவியுறும் அச்சபையிலுள்ள வேதியரனை வரும் அகமகிழ்ந்து நந்தனாருடைய பாக்கியத்தைப் பலவாறாய்ப் போற்ற வில்லையா? இவையெல்லாம் அவர்களை ஹிம்ஸிக்க வேண்டுமென்றா செய்கிறார்கள்? பிரத்தியக்ஷத்தில் இவ்விஷயங் களை எல்லாம் நன்கறிந்தும் அறியாதவர்போல் பிறர்மேல் குறை கூறுவது அறிஞர்களுக்கழகா? தீண்டத்தகாதவர்கள் ஆலயம் முதலிய சிலவிடங்களில்பிரவேசிக்காமலிருப்பதால் அவர்களுக்கு யாதொரு கஷ்டமுமில்லை. பின்னோ ஏழ்மைத்தனத்தால் உண வுக்கு வருந்திக் கஷ்டப்படுகிறார்கள், ஆலயப்பிரவேசத்தாலும் பிராமணர்கள் வீட்டில் புகுவதாலும் இக்கஷ்டம் எப்படிநிவர்த்தி யாகும்? கண்ணில் இருக்கும் ரோகத்திற்குக் கையில் மருந்து போட்டால் நிவர்த்தி ஏற்படுமா? பிரபுக்களாயிருக்கிறவர்கள் பணவசூல் செய்து அதனால் அவர்களுக்கு உதவி செய்தால் தாரித்திரிய ரோகம் நிவர்த்தியாகிச் சுகித்திருப்பார்கள். தீண் டாதவர்களைமுன்னுக்குக்கொண்டுவரவேண்டுமென்று கூத்தாடிக் கூச்சலிடும் கருணைக்கடல்கள் இந்த வார்த்தையைக்கவனிப்பதே யில்லை. யாராவது நிர்ப்பந்தமாய்த்தெரிவித்தாலும் அந்த விடத் தில் பலமாய் மௌனம் சாதிக்கிறார்கள். இதனால் தீண்டாதவர் களிடம் இவர்களுக்கிருக்கும் கருணை வெள்ளம் எவ்வளவுபெருகி யிருக்கிறதென்பது நன்கு விளங்கவில்லையா?

மேலும், தீண்டாதவர்களை முன்னுக்குக்கொண்டுவரவேண்டு மென்கிற விஷயத்தில் மஹாத்மா காந்தியவர்கள் அதி முயற்சி யுடனிருக்கிருரென்றும் அவர்களின் அபிப்பிராயத்தையே தாங்க ளும் பின்பற்றுகிறோமென்றும் பறையறைந்து கொண்டும் பலர் தமக்குத் தோன்றியவாறு கூறுவதையெல்லாம் மகாத்மாவின் அபிப்பிராயமாய்ச் சாற்றிப் பல ஆஸ்திகர்களின் மனதைத் துன் புறுத்துகிறுர்கள். இவ்விஷயமாய் மகாத்மாஜீ அவர்களிடத்தில் நேரில் கலந்து அவர்களின் அபிப்பிராயம் எவ்வளவுவரையில் இவர்களின் நோக்கத்தைப் பின்பற்றுகிறது என்கிற உண்மையை அறிய எமக்குச் சமயம் நேரவில்லை. ஆயினும் காந்தியின் அபிப் பிராயத்தையே பின் தொடர்கிறோம் என்று சொல்லுகிறவர்க ளுக்குள்ளே இவ்விஷயத்தில் அனேக அபிப்பிராய பேதங்கள் இருப்பதாகத் தெரிகிறபடியால் இவர்களால் சொல்லப்படும் விஷ யம் பூராவும் மகாத்மாவின் அபிப்பிராயம் தான் என்று நம்புவ தற்கு இடமில்லாம லிருக்கிறது. இந்த விஷயத்தில் பத்திரிகை கள் மூலமாகவும் சில ஆப்தர்கள் வாயிலாகவும் நான் அறிந்து கொண்டவரையில் தீண்டாதவர்களை இந்துக்களுடைய ஆலயங் களில் சுவாமிதர்சனத்திற்காகவும், கிணறுகளில் ஜலம் எடுப்பதற் காகவும் அக்கிரகாரம் முதலிய இடங்களில் வீட்டுத் திண்ணைக ளில்சூத்திரர்களைப்போல் இவர்களையும்உட்காரும்படிக்கும் ஆதர வு அளிக்கவேண்டுமென்றும் நான்கு ஜாதிகளைத் தவிர சண்டா ளன் என்று வேருன ஓர் ஜாதிப்பிரிவு இல்லையென்றும் மகாத்மா அவர்கள் கருதுவதாகத் தெரிகின்றது. இந்த அபிப்பிராயத்தி லும் எவ்வளவுவரையில் உண்மையாய் இருக்கும் என்பதை நாம் தீர்மானிக்க முடியவில்லை. இவ்விதமே உண்மையாயிருப்பின் மகாத்மா அவர்களுக்கு இருக்கும் மகிமைக்கு இவ்விதம் கூறு வது அழகல்ல வென்பதே எமது அபிப்பிராயம்.

தற்காலம் இவ்வுலகிலுள்ள கோடிக்கணக்கான பலஜனங்க ளும்போற்றக்கூடியமகிமையும் பெருமையும் வாய்ந்தவர்மகாத்மா காந்தி அவர்கள் தான் என்பதை யறியாதார் யாருமிலர். இவ் விதமகிமை பெற்ற அவர்கள் முற்பிறவியிற் செய்த நற்கர்மத்தின் பயனுல் பேத புத்தி விலகி உலகிலுள்ள விஷயங்களில் பற்றுதலை

அறவே யொழித்து வைராக்கியம் பெற்று ஒருவிதமான பிடிப்பை உறுதியாய்க் கொண்டிருப்பதால் அவர் மனதில் உலக வியவகாரத்தைப் பொருத்து எவ்விதம் கருதினுலும் அவரைப் பொருத்தமட்டில் அது அதிக பாதகமாகமாட்டாது, என்று சொன்னுலும் "சிறிது, பெரிது, இது நம்முடையது, இது பிறருடையது, எவ்விதத்திலும் பொருளைப் பெறவேண்டும், உலக சுகத்தை நீண்டு அனுபவிக்கவேண்டும். நாமே எல்லாருக்கும் மேலானவன்" என்பது முதலான தோற்றங்களை அதிகம்கொண்டு அக்ஞானக்கடலில் மூழ்கிக்கொண்டு இவருடைய நடத்தையைப் பின்பற்ற வேண்டுமென்கிற ஆவல்கொண்ட கோடிக்கணக்கான ஜனங்களுக்கு அவர்களின் புத்திக்கிருக்கும் பக்குவத்தையும் அதிகாரத்தன்மையையும் கவனியாமல் தம்முடைய நிலைமையிலேயே அவர்களுமிருப்பதாகக்கருதி அவர்கள் அதிகமான கஷ்டத்தை அடைவதற்குக் காரணமாயும் சாஸ்திரங்களுக்கும், ஸாதுக்களின் அனுஷ்டானங்களுக்கும் நேர் விரோதமாயிருக்கும் இந்தமாதிரி விஷயத்தை எங்ஙனம் மகாத்மா அவர்களும் வெளியிடத்துணிந்தார்களோ! மேற்கூறும் விஷயத்தையும் சற்று கவனிக்கவேண்டும். லோகக்ஷேமார்த்தமாய் அத்வைதமதத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று அவதரித்த ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாரவர்கள் காசிமா நகரில் கங்கையில் ஸ்நானம் செய்து தம் சீடர்களுடன் திரும்பி வரும்கால் மார்க்க மத்தியில் இவரைப் பரீக்ஷை செய்யவேண்டி சண்டாள வேடம் பூண்டு வந்த விசுவநாதரைப் புலையனெனக்கருதி நம் பரமாசார்யாள் (गच्छ गच्छ) விலகு விலகு என்று கூறினதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அறிவே அவ்வுருவென்று கருதத்தகுந்தவரும் சகல கலைகளையும் கசடறக் கற்றுணர்ந்தவரும் அத்வைதமதத்தை நன்கு நிலை நாட்டியவருமான அம்மகான் இவ்விதம் கூறியதற்கு யாது காரணமென்று யோசிப்பின் அவர்களுக்குப் பேதபுத்தியில்லாவிடினும் தம்முடன் கூடவிருக்கும் சீடர்கள் காமக்குரோதங்களுக்கிடுபட்டு பேதபுத்தியுடனிருப்பதால் நம்அனுபவத்தைவெளியிட்டால்அவர்கள் கெட்டுப்போவார்களென்று நினைத்துத் தாமும் அவர்கள் நிலையிலிருந்துகொண்டு இவ்விதம் சொல்லியிருக்கிறுர்களென்றே கூற

வேண்டும். அதற்குப் பிறகு புலையராய் வந்திருக்கும் விசுவநாதருக்கும் இவர்களுக்கும் வாதம் ஏற்பட உண்மையில் இவர் புலையரல்லவென்றறிந்த நம் ஆசார்யாள் गुरुरित्येषा मनीषा मम பேதபுத்தியைப் போக்கி சகல வஸ்துக்களையும் பரமாத்மஸ்வரூபமாய் பார்க்கும் அறிவுடையோர் எவராயிருப்பினும் அவர் எனக்கு குரு என்று எனது அபிப்பிராயம் என்று விடையளித்திருக்கிறார்கள். இதனால் ஆசார்யாளின் உட்கருத்தில் பேதமில்லை என்று மாத்திரம் தெரிகின்றது. வெளி வியவகாரங்களில் அதைக்காண்பித்தால் ஸாமான்ய ஜனங்கள் இதைப் பின் பற்றிக் கெட்டுப்போவார்கள். அவ்விதம் கெடுப்பது தர்மமல்ல என்று துவக்கத்தில் பேத வியவகாரம் செய்திருக்கிறார்களென்று நன்கு புலப்படவில்லையா ?

பின்னும், ஸ்ரீ கண்ணபிரான் அர்ச்சுனனுக்குப் பலவாறாக உபதேசித்து முடிவில் " நீ கர்மயோகத்தை அவசியம் செய்ய வேண்டுமென்று நிரூபித்து உன் ஆத்மப்பிரயோஜனத்தையுத்தேசித்து நீ செய்யாவிட்டாலும் பிறருக்காகவாவது நீ அனுஷ்டித்தே தீரவேண்டுமென்று அடியில் வரும் வசனத்தால் போதிக்கிறார்.

लोकसंग्रहमेवापि सम्पश्यन्कर्तुमर्हसि ।

நீ அரசனாயிருப்பதால் உன் ராஜ்யத்திலுள்ள சகல ஜனங்களும் தம் தம் தர்மத்தை விதிவழுவாது நன்கு அனுஷ்டிக்க வேண்டியது முக்கியமெனக்கருதியாவது நீ கர்மானுஷ்டானம் செய்ய வேண்டும். என்னால் செய்யப்படும் கர்மானுஷ்டானத்தால் லோக சங்கிரகம் எப்படி ஏற்படும் என்று சங்கிப்பாயாகில் சொல்லுகின்றேன் கேள், என்று மறுபடியும் பகவானே

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥

" சகல சாஸ்திரங்களையும் நன்கறிந்து அவைகளிற் கூறியவாறு அனுஷ்டிப்பவன் சிரேஷ்டன், அவ்வித சிரேஷ்டன் நல்ல கர்மாவையோ தீயகர்மாவையோ எதை எதை அனுஷ்டிக்கிறானோ அந்தக்கர்மாவையே அவன்நடத்தையைப் பின்பற்றும்ஸாமான்ய

ஜனங்களும் அனுஷ்டிக்குமே யல்லாமல் வேறு விதமாய் மாருது, வைதிககார்யத்திலும் லௌகிக கார்யத்திலும் அவன் எதைப் பிர்மாணமாகக் கருதுகிருனே அதையே உலகமும் அனுஸரிக்கும், ஆகையால் சிரேஷ்டனுன உன்னுல் வர்ணுசிரம தர்மங்கள் நன்கு அனுஷ்டிக்கப் படாவிட்டால் உலகமும் அனுஷ்டிக்காமல் பாபத்திற்குள்ளாகும். உலகத்தை ரக்ஷிக்கவேண்டியது நீ அவசியம் உன் தர்மத்தைச் சரியாய் நடத்தவேண்டும் என்று செப்புகின்ருர்.

மேலும், வேறு காரணங்களை நீ கவனிக்க வேண்டாம், என்னுடைய ஆசாரத்தைக் கவனிக்கும் உன்னுலும் என்னுல் செய்யப்படுவதுபோல் செய்யப்பட்டுத் தீரவேண்டும்.

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किंचन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥

"ஹே அர்ஜுனு! ஸர்வலோகேசுவரனுன எனக்குச் செய்ய வேண்டியதான யாதொரு கர்மாவும் கிடையாது. என் கிடையாதென்ருல் ஸகலமும் என்னுலடையப் பட்டிருப்பதால், மூன்றுலகங்களிலும் அபேக்ஷிக்கக் கூடிய வஸ்து யாதொன்றுமில்லை. ஆகையால் ஒருவிதமான கர்மாவும் நான் செய்யவேண்டியதில்லை. இவ்விதம் பெறவேண்டியதைப் பெற்று கிருதகிருத்தியனுயிருக்கும் நானும் கர்மானுஷ்டானம் செய்து கொண்டே வருகிறேன், உன்போன்றவர்களுக்குச் சாஸ்திரீயமான கர்மானுஷ்டானத்தைச்செய்யாமல்விட எப்படி முடியும்? கிருத கிருத்யாளான தங்களுக்குக் கர்மானுஷ்டானம் எதற்கெனச் சங்கிப்பாயாகில்

यदि ह्यहं न वर्तेयं जातु कर्मण्यतन्द्रितः ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥

நான் ஒரு சமயம் அஜுதரவாய்க் கர்மானுஷ்டானம் செய்யாமல் இருப்பேனுகில், ஹே அர்ஜுனு! ஜனங்கள் என்னுடைய மார்க்கத்தையே பூராவும் அனுசரித்து நடப்பார்கள். அவ்விதம் நடந்தால் என்னதோஷம் ஏற்படுமென்ருல் கூறுகின்றேன். கேள்

उत्सीदेयुरिमे लोका न कुर्यां कर्म चेदहम् ।
सङ्करस्य च कर्ता स्यामुपहन्यामिमाः प्रजाः ।

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम् ॥

"இவ்வுலகிலுள்ள ஜனங்கள்யாவும் ஜகத் பிரதிஷ்டைக்கு தர்மமே மூலகாரணமென்று சுருதிகளில் கூறப்படும்; தர்மத்தைக் கைவிடுவதால் அநியாயமாய் நாசத்தையடைந்துவிடும் தர்ம நாசத்தால் ஏற்படும் வர்ணஸாங்கர்யம் முதலான தோஷங்களுக்கு நானேகர்த்தாவாக ஆய்விடுவேன். என்னைப்பார்த்து சகல ஜனங்களும் கர்மானுஷ்டானத்தை விட்டு, பாபத்திற்குள்ளாகும். அவ்விதமானால் நானே அவர்களைக்கொன்றவனாக ஆகிறேன். ஆகையால் கர்மானுஷ்டானத்திற்கு அதிகாரிகளான அக்ஞர்களுக்கு சாஸ்திரவிருத்தமான ஆசாரங்களைப் போதித்து புத்திபேதத்தை உண்டுபண்ணக்கூடாது." என்று கீதா சாஸ்திரத்தில் விஸ்தாரமாய் நிரூபித்திருக்கிறார். இதனால் எவ்வளவு அறிவாளிகளாயிருந்தாலும் எவ்விதமகிமை பெற்றிருந்தாலும் சாஸ்திர விருத்தமான ஒரு கார்யத்தைச் செய்ய வேண்டுமென்று ஸாமான்ய ஜனங்களுக்கு தம் அனுஷ்டானத்தினாலும், வியவகாரத்தினாலும் போதிப்பது கூடாதென்றும், அப்படிப்போதிப்பதால் அதையனுஷ்டித்துக் கெட்டுப்போகும் ஜனங்களை இவர்களே ஹிம்ஸித்தவர்களாகிறார்களென்றும் ஸ்பஷ்டமாய் ஸ்ரீபகவானாலேயே வெளியிடப்பட்டிருப்பதை மகாத்மா காந்தியவர்கள் சற்றும் கவனியாமல் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்கிற சாஸ்திர விருத்தமான இந்த அபிப்பிராயத்தை எப்படி வெளியிட முன்வந்தார்களோ!

லோகக்ஷேமத்தின்பொருட்டுப் பாடுபடுகிறோமென்று முன் வந்தவர்கள் சாஸ்திர விருத்தமான ஆசாரத்தைக் கடைப்பிடித்தொழுகும்படி போதித்து ஜனங்களைப் பாபத்திற்குள்ளாக்குவது எங்ஙனம் உசிதமாகும். இவ்விதம் செய்வதுதானா லோகக்ஷேமமானகார்யம். இதற்குமுன் எத்தனையோ மஹான்கள் இவ்வுலக க்ஷேமத்திற்குப் பாடுபட்டவர்களுண்டு. அவ்விதமிருந்தும் தீண்டாமையை யொழித்தால்தான் உலகத்திற்கு க்ஷேமமுண்டாகுமென்று ஒருவராலும் கண்டுபிடிக்கப்படாத அபூர்வமான குறுக்குவழியைத் தற்காலத்திலுள்ளவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவர்கள் எவ்வளவுமுயற்சி எடுத்துக்கொண்டு சிரமப்பட்

டாலும் டவுன் வாஸிகளான சில தீண்டாதவர்களைத் தவிர மற்றுமுள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களில் வசிப்பவர்களிடம் இவர்கள் பிடிவாதம் பலிக்காது என்று ஆங்காங்கு வஸிப்போர்களுக்கும் நன்கு தெரிந்தவிஷயமே. நகரவாஸிகளான சிலரைத்தான் என் இவர்கள் பாபத்திற்குள்ளாக்கி தாமும் தோஷத்திற்கு ஆளாகவேண்டுமென்று கருதிப் பிரமாணங்களின் வாயிலாக உண்மையையறிவித்தால் பிறகாகிலும் இந்தக் கெட்டகார்யத்திலிருந்தும் நிவர்த்தியடைவார்களென்று இவ்விதம் வெளியிடமுன்வந்தோம். ஒருவர்பேரில் அசூயையினாலோ, பக்ஷபாதத்தினாலோ இவ்விஷயத்தை வெளியிடவில்லை என்பது உண்மை. இதற்குப்பிறகும் ஸத்தியாக்கிரகம் என்னும் பிடிவாதத்தை நாங்கள் இந்த விஷயத்தில் விடமாட்டோமென்று கூச்சலிடும்பக்ஷத்தில் அவர்களுக்கு ஆஸ்திக புத்தியைக்கொடுத்து சாஸ்திரீயமான தர்மமார்க்கத்தில் பிரவேசிக்கும்படி அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று எங்கும் நிறைந்து பரஞ்ஜோதிஸ்வரூபமாய் பிரகாசிக்கும் கருணாநிதியான பரமேசுவரனுடைய திருவடிகளைத்தியானித்து இவ்விஷயத்தையும் இத்துடன் முடித்துக் கொள்ளுகிறோம். சுபம்.

इत्थं शास्त्रवचांसि साधुचरितान्यालोक्य सद्देशिको-
द्भूताव्याजकृपाबलेन लिखितो ग्रंथोऽधुनायं मुदा ।
राधानाथपदाम्बुजातयुगळे भक्त्यार्पितोऽमुं प्रभुः
स्वीकुर्याद्भगवान्मुकुन्द इति तं याचामहे सादरम् ॥

ஸ்ரீமதாசார்ய சரணனுடைய அவ்யாஜமான கருணாபலத்தைக் கொண்டு சாஸ்திர வசனங்களையும் பெரியோர்களின் அனுஷ்டானங்களையும் நன்கு கவனித்து எழுதி வெளியிடப்பட்ட இந்நூலை "எதைச்செய்தாலும், எதைப்புசித்தாலும் அதை எனக்கு அர்ப்பணம்செய்" என்று கீதா சாஸ்திரத்தில் கூறியதற்கிணங்க பக்தியுடன் பகவானுடைய சரணகமலங்களில் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது. இதை ஸகல லோகங்களுக்கும் பிரபுவான பகவானான ஸ்ரீ முகுந்தரும் அங்கீகரிக்கவேண்டுமென்று மிகவும் ஆதரவுடன் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறோம். சுபம்.